பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

	ரூ. அ.
வருட சந்தா	3—0
6 மாத சந்தா	1—12

[வாரப்பதிப்பு.]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

	ரூ. அ.
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | அக்ஷய-ஹூ சித்திரை-மீ 27-உ (9—5—26) ஞாயிற்றுக்கிழமை, ஈரோடு. | மலர் 2.

மகாத்மா காந்திக்கு ஜே!
வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப் பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப்பீசுகள் ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சுவேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100-க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும்முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிபோ, திருப்பூர், (தென் இந்தியா,)

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,
ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர் இலாகா

திருப்பூர்
சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள், இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும், தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். ஆர்டர் 100-க்கு 25 ரூபாய்வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சிப் பத்திரம்.)
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்,
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார்,
கத்தர் ஸ்டோர். திருப்பூர். (தென் இந்தியா.)

காங்கிரஸ் அத்தாக்ஷி
பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு
அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

திரு. சீனிவாச அய்யங்காரின் அரசியல் வாழ்க்கை.

நாடு ஒத்துழையாமையிலிருந்த சமயம் என் செய்து கொண்டிருந்தார்?

மெத்தை தைத்த நாற்காலியில்
அதிகார வர்க்க நிழலில்
சர்க்காருக்கு யோசனை கூறிக் கொண்டிருந்தார்.

திரு. ஈ. இராமசாமி முதலியாரின் பிரசங்கம்.

திருச்சி டவுன் ஹாலில் 15-4-26-உ சென்னை அட்வகேட் திரு. பி. இராமநாதன் பி. ஏ., எம். ஆர். ஏ. எஸ். அவர்களின் தலைமையின் கீழ் கூடிய ஒரு பெரும் கூட்டத்தில் சென்னை பிராமணரல்லாதார் கட்சிப் பிரமுகராகிய திரு. ஏ. இராமசாமி முதலியார் பி. ஏ., பி. எல், எம். எல். சி. அவர்கள் வரப்போகும் தேர்தல்களைப்பற்றியும் சுயராஜ்யக் கட்சியாரின் சூழ்ச்சிகளைப் பற்றியும் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் அவர்களின் பிரசாரத்தின் இரகசியத்தைப் பற்றியும் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது:—

கனவான்களே!

நான் இப்பொழுது உங்கள் முன்னிலையில் ஜஸ்டிஸ் கட்சியானுகவோ, பிராமணனல்லாதானுகவோ தோன்றவில்லை. ஒரு தேச பக்தனுய் நிற்கிறேன். கொஞ்சகாலமாக என்பேரிலும் ஜஸ்டிஸ் கட்சியின் பேரிலும் ஓயாது பொய்யையும் புளுகுகளையும் சொல்லி ஜஸ்டிஸ் கட்சியார் சர்க்கார் பூசாரிகளென்றும் அதிகாரிகளைக் கும்பிடுகிறவர்களென்றும் பழிசுமத்தி உங்கள் மனதை சில பிராமணர்களும் பிராமணப்பத்திரிகைகளும் தங்களின் சூழ்ச்சிப்பிரசாரத்தால் உங்களை ஏமாற்றியிருப்பதை மறந்து விட்டு நான் சொல்லும் சில வார்த்தைகளைப் பொறுமையுடன் கேட்கும்படி வேண்டுகிறேன்:—

சுயராட்சியக்கட்சி.

முதலில் சுயராஜ்யக்கட்சியைப்பற்றியும் அதன் தலைவராகிய திரு. சீனிவாசய்யங்காரைப்பற்றியும் சில வார்த்தை சொல்லுகிறேன். இந்தியன் நேஷனல் காங்கிரஸ் என்னும் பெயர் கௌரவிக்கக் கூடியதாகும். ஆனல் அரசியல் விவகாரங்களை சுயராஜ்யக்கட்சியின் ஆட்சிக்குக் கீழ்வைக்கப்பட்டதும் இந்தியாவிலுள்ள எல்லா மக்களின் பேரால் பேசும் அதிகாரத்தையும் உரிமையையும் அது இழந்து விட்டது.

இப்பொழுது திரு. சீனிவாசய்யங்கார் சென்னை சுயராஜ்யக்கட்சிக்கு தலைவராகவும் காங்கிரசில் செல்வாக்குடையவராகவுமிருக்கிறார். இன்று காங்கிரசின் தீர்மானங்கட்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுகிறாராம்.

திரு. அய்யங்காருக்கு காங்கிரசினிடம் எப்பொழுது விசுவாசம் பிறந்தது? எப்பொழுதாவது அதன் கொள்கையையும், கட்டளையையும் நிறைவேற்றியுள்ளாரா? அதன் முடிவிற்கு அடங்கியிருக்கிறார் என்பதை அறிய அவரின் அரசியல் வாழ்க்கை அறிந்து கொள்வோம்.

திரு. ஐயங்காரின் அரசியல் வாழ்க்கை.

1919-ம் ஆண்டில் சீர் திருத்தம் கொடுக்கப்படுவதற்கு முன் நாட்டிற்காகப் போரிடவும் பிரிட்டிஷாரிடமிருந்து சீர்திருத்தம் பெறவும் எல்லா அரசியல் கட்சியாரும் இங்கிலாந்தில் கூடியபோதும், அடிக்கடி தியாகம் செய்துள்ள திரு. திலகர் கூட்டுக் கமிட்டியின் முன்னிலையில் சாட்சியம் கூறிய போதும், திருவாளர்கள். ஜின்னு, கெல்கர், சிந்தாமணி, சர். சுரேந்திரர் மற்றும் அநேக காங்கிரஸ் தலைவர்கள், பல்லாண்டுகளாக நாட்டிற்குழைத்துள்ளவர்களெல்லாம், இங்கிலாந்தில் அரும்பாடுபட்டுக்கொண்டு நாட்டிற்காகப் போராடி வரும் போதும் திரு. சீனிவாசய்யங்கார் யாது செய்து கொண்டிருந்தார்? மகா யுத்தம் முடிந்த தருவாயில் மிகவும் கொந்தளிப்பான காலத்தில் அவர் சென்னையில் மெத்தை தைத்த நாற்காலியில் குளிர்ச்சியான அதிகாரவர்க்க நிழலில் அட்வகேட்ஜெனராலாக உட்கார்ந்து கொண்டு அரசாங்கத்திற்கு யோசனை கூறிக் கொண்டிருந்தார். இம்மாகாணத்தில் அப்பொழுது சுயஆட்சி சம்பந்தமான கிளர்ச்சியிருந்ததும், தலைவர்களைக் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டதும் பத்திரிகைகளின் ஜாமீனைப் பறித்ததும் கொடிக் கொண்டாட்டங்களை மிருகத்தனமாய் அடக்கியதும், அதிகாரவர்க்கத்தினர்களும் மக்களும் நூற்றுக்கணக்கான வழியில் முரண்பட்டதும் உங்கட்கு நினைவிருக்கலாம். அப்போது செய்யப்பட்ட கிளர்ச்சியை நாங்கள் முற்றிலும் அங்கீகரித்ததாக நான் கூறவில்லை. ஆனல் திரு. சீனிவாசய்யங்கார் தான் பெரிய தேசாபிமானியென்று கூறிக் கொள்ளுகின்றபடி நாங்கள் அப்பெரிய தேசாபிமானிகளல்ல. அக்காலத்தில் அவ்வளவு பெரிய தேசாபிமானி திரு. ஐயங்கார் எப்படியிருந்தார் என்பதையே கூறுகிறேன். அவர் சென்னையில் அட்வகேட்ஜெனராலாக கடலினின்றுவரும் தென்றல் காற்றை நுகர்ந்து இன்புற்றிருந்தார். அவர் கூறும் நியாய யோசனைக்குச் சென்னை அரசாங்கமும் கட்டுப்பட்டது. அவர் அரசர் பிரானின் வாரண்டினுல் நேராக உத்தியோகம் பெற்று வகித்திருந்தார். அவர் கைது செய்யும் வாரண்டுகளைப் பின் வாங்கிக் கொண்டிருந்தால் அரசியல் சம்பந்தமாய்த் துன்புற்ற பலர் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். நான் அரசாங்கத்தின் அந்தரங்கத்திலில்லை. ஆதலால் அநேகரைக் கைது செய்வதற்கு திரு. ஐயங்காரின் சம்மதம் பெறப்பட்டதா இல்லையாவென்பது எனக்குத்தெரியாது. ஆனல் 1916 1919ம் வருடங்களுக்கு மத்தியில் ஓர் அரசாங்கம் அரசியல் வாதிகளைப்பயமுறுத்திய மாதிரியில் அட்வகேட் ஜெனரலாயிருந்த திரு. ஐயங்கார் அதிகாரவர்க்கத்தினரின் நம்பிக்கையும் விசுவாசமுள்ள சிநேகன் என்பது உண்மையான விஷயம்.

இனி உத்தியோகஸ்தர் நிலையில் அப்பொழுது அவர்கொண்டிருந்த அரசியல் கொள்கையை விட்டு விட்டு, உத்தியோகப்பற்றற்ற தன்மையில் அவர் கொண்டிருந்த கொள்கையைப்பார்ப்போம். அவர் 1920-ம் ஆண்டில் அட்வகேட் ஜெனரல் பதவியை இராஜீநாமாச் செய்தார். அவர் இராஜீநாமாச் செய்யும்போது அவரின் அரசியல் விவகாரம் யாது? முதலில் அவர் சட்டசபைக்குள் நுழைந்ததும், அக்காலத்தில் அவர் எவ்வளவு தூரம் காங்கிரசில் அன்புடையவராயிருந்தார்? அதன் கொள்கைகளில் எவ்வளவு விசுவாசமுடையவராக யிருந்தார்? அதன் கட்டளைகளை நிறைவேற்ற எவ்வளவு தூரம் ஆவலுடையவராக விருந்தார்? அக்காலத்தில் ஒத்துழையா இயக்கம் உன்னத நிலையிலிருந்த தென்பதையும், காங்கிரசில் மூன்றுவகைப் பகிஷ்காரமாகிய, சட்டசபை, நீதிமன்றம், பாடசாலை முதலியவைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென காங்கிரஸ் கட்டளையிட்டுள்ளதும் உங்கட்குத் தெரியும். அதை நாடு ஒப்புக்கொள்ளும்படி மகாத்மாவின் சம்மதத்துடன் நாட்டின் முன்னிலையில் வைக்கப்பட்டது. திரு. சீனிவாசய்யங்கார் அவைகளை ஒப்புக்கொண்டாரா? சட்டசபைகளை பகிஷ்கரிக்கவேண்டுமெனக் காங்கிரஸ் முடிவு செய்திருந்ததை தள்ளிவிட்டு 1921-ம் ஆண்டில் அவர் யூனிவர்சிட்டி மெம்பராக சட்டசபையில் நுழையவில்லையா? அவர் காங்கிரசின் தீர்மானத்திற்கு எதிரிடையாக ஹைகோர்ட்டிலும் ஜில்லாக் கோர்ட்டுகளிலும் வக்கீல் தொழிலை நடத்தவில்லையா? அவர் தனது சமூகத்தினர்களை பாடசாலைகளையும் கல்லூரிகளையும் புறக்கணிக்கும்படி தூண்டினரா? இல்லை, இல்லை. அப்போது காங்கிரசுக்கு விசுவாசமாயிருக்க வேண்டுமென்று திரு சீனிவாசய்யங்கார் உணரவில்லை. காங்கிரஸ் விதித்த நிபந்தனைகளையெல்லாம் பின்பற்றுமல் அம்முறையில் தமக்கு நம்பிக்கையில்லையென்றும் அத்திட்டத்தை மகாத்மா காந்தி உட்படுத்தியது தவறென்றும் சொன்னவர், இன்று திருச்சினுப்பள்ளி மக்களிடம் வந்து காங்கிரஸ் முடிவுகள் பரிசுத்தமானவையென்றும் மக்கள் அவற்றிற்குக் கீழ்படியவேண்டுமென்றும் கூறுகிறார். சுயராஜ்யக்கக்ஷியை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டமையால் 1920-ம் ஆண்டிலிருந்ததைவிட காங்கிரஸ் அபிவிருத்தி அடைந்துவிட்டதா? மகாத்மா காந்தியிடமிருந்து பெற்ற கல்கத்தா உடன்படிக்கை பம்பாய் உடன்படிக்கை பெல்காம் உடன்படிக்கை ஆகிய உடன்படிக்கைகளால் காங்கிரசின் முடிவுகளின்படி தமது கட்சிக்கே லாபமென்பதை உணர்ந்து திரு. சீனிவாசய்யங்கார் காங்கிரசுக்கு விசுவாசமாயிருக்கிறாரா? தேர்தல்களின்போதெல்லாம் இழிவான முறையில் உபயோகப் படுத்தப்பட்டுவரும் காங்கிரஸ், மகாத்மா காந்தி இவர்களுடைய நிலைமையென்ன? மகாத்மா காந்தி காங்கிரசினின்றும் விலகிவிட்டாரென்றே சொல்லவேண்டும். காங்கிரஸ் எவ்வாறு இரு பெரும் பிளவுகளாகப் பிளவுபட்டுவிட்டதென்பதையும், மகாத்மா காந்தி நம்பிக்கை யிழந்து கதருக்காகத் தனியே உழைக்க, நூல்நூற்போர் சங்கம் ஏற்படுத்தியுமிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

தேசமக்களிடையில் செல்வாக்குடனிருந்த ஒருவரை, அதிகார வர்க்கத்தார் மதித்த ஒருவரை அரசியலிலிருந்து சுயராஜ்யக் கட்சியார் வெளியேற்றிவிட்டார்கள்.

முயற்சியின் பயன்.

இங்கிலாந்தில் ஆயிரமாய் பெருக்கிச் சுத்தம் செய்கிற வேலையிலிருந்த "பினிட்" என்பவர், சுயஞானத்தால் ஓய்வு நேரங்களில் கல்வி பயின்று தற்போது என்ஜினீயர் வேலை பார்த்து வருகின்றாராம்.

குருவிப் பேச்சும் ஃ ஃ ஃ ஃ அசரீரி வாக்கும்.

ஐயங்கார் கோஷ்டிக்குத் திரு. ஏ. இராமசாமி முதலியாரைக் கண்டால் பெரும்பயம். பனகால் அரசர், சர். கே. வி. ரெட்டி நாயுடு முதலிய தலைவர்களிடத்தில் எள்ளளவும் அச்சமில்லை யென்பதாகவும், ஆனால் திரு. முதலியாரைக் கண்டால் அவர்கள் குலை நடுக்கெடுத்து விடுகிறதென்றும் ஒரு அசரீரி கிளம்புகிறது. திரு. சீனிவாசய்யங்கார் இரணிய அவதாரம் எடுக்கும் சக்தி படைத்திருப்பாரேயானால் திரு. முதலியாருடைய பெயரே அரசியல் துறையில் வழங்கப் பெறாமல் அடித்திருப்பார். ஆனால் பாவம் என் செய்வார்! அவ்வித சக்தி அவருக்கு இல்லை.

ஃ ஃ ஃ

இரணியன் பிரகலாதனை உலக வாழ்க்கையினின்று அழிக்க முயற்சித்ததுபோல், திரு. ஐயங்கார் திரு. இராமசாமி முதலியாரை சட்ட சபைக்குள் நுழையாமலிருக்க ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார். அது, “கவசக்தி” முதலியார் போன்ற “தொண்டை கிழியும் வரை பேச”க்கூடிய தூதுவர்களைக்கொண்டு செங்கல்பட்டு ஜில்லா வெங்கும் ஊரூராய்க் கிராமம் கிராமமாய்ப்பிரசங்கங்கள் செய்து எலக்ஷன் காலத்தில் ஓட்டுக்கிடைக்காமல் செய்ய வேண்டுமென்பதே.

ஃ ஃ ஃ

இந்த நிலைமையில் திரு. இராமசாமி முதலியார் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று நமது நண்பர் ஒருவர் கேட்கிறார். நான் போய்விட்டாலும் பரவாயில்லை, தனது கட்சியார் தோல்வியுறலாகாது என்று கட்சி பலத்தை நாடி, திருச்சி, சென்னை முதலிய வெளியூர்களில் ஐயங்கார் கோஷ்டியின் வண்டவாளங்களையும் திரு. ஐயங்காரின் அரசியல் தத்துவார்த்தத்தையும் வெளியிட்டுக் கொண்டுவருகிறார். ஸ்ரீ கிருஷ்ண பகவானை நம்பி சதா தொழுதுக் கொண்டிருந்த பிரஹலாதனைப்போல் திரு. முதலியார் செங்கல்பட்டு ஜில்லா ஓட்டர்களை நம்பிக் கொண்டிருக்கிறார் என மற்றோர் அசரீரி கிளம்புகிறது.

ஃ ஃ ஃ

திரு. இராமசாமி முதலியாரை தலையெடுக்க வொட்டாமல் செய்ய வேண்டுமென்பது ஐயங்காரின் பிரதம வேலைகளிலொன்று. அதற்காக, சமீபத்தில் திரு. ஐயங்கார் கோவைக்கு வந்திருக்கும்போது, தன்னுடைய எலெக்ஷன் வேலையின் பூராபலனைத்தையும் செங்கற்பட்டு ஜில்லாவிலேயே பிரயோகிக்கப்போவதாகவும், தன்னுடைய கவலையெல்லாம் செங்கற்பட்டு ஜில்லாவிலேயே படிந்திருக்கிறதென்றும் தனது நண்பர் குழாத்துடன் பேசிக் கொண்டிருந்ததாக ஓர் குருவி நமது காதில் குசு குசு வென்று கூறுகிறது.

ஃ ஃ ஃ

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் பல உண்மை வீரர்களை-தியாக மூர்த்திகளை-தேசத் தொண்டர்களை-காங்கிரஸ் மகா சபைக்குள் ஈர்த்து, தேசமெங்கும் தேசீய விதையை விதைத்து, சமத்துவச் செடி முளைத்து, ஒற்றுமைப்பூ அரும்பியது. ஆனால் சுயராஜ்யக் கட்சி தோன்றி யூரும் பேரும் தெரியாத பல சுயநலப் பேய்களை-புகழ்கோரும் பெரியோர்களை-தன்னலஅம்மாஞ்சிகளை- காங்கிரஸ் மகா சபைக்குள் ஈர்த்து, தேசமெங்கும் விதேசியத்தை விதைத்து, பகைமைச் செடி வளர்த்து, கொந்தளிப்புப் பூ அரும்பி கொலையையும், கொள்ளையையும் தலைவிரித்தாடுங் கனி பழுக்கப் பெருதவி புரிகிறது, என்று குருவி வருத்தத்துடன் குழைகிறது.

காந்தியின் மகிமை.

இரண்டு கிராம வாசிகளின் சம்பாஷணை.

சாமுண்டி:—ஏ, அண்ணே மதுரைவீரா! எல்லாரும் காந்தியை மகாத்மா, மகாத்மா என்று கூப்பிடுகிறார்களே, அவர்கிட்ட ஏதாவது மகிமை இருக்கிறதா?

மதுரைவீரன்:—மகிமை என்றால் என்ன?

சா:—மகிமை என்றால் தெரியாதா? சித்து விளையாட்டு. கல்லை கற்கண்டு செய்கிறது; சாணியை சந்தனம் செய்கிறது; கள்ளைப் பன்னீராக்குவது; இந்த மாதிரி சித்து விளையாட்டுகள்தான்.

ம:—அடேயப்பா! இதுதானா சித்து என்கிறது! இதெல்லாம் அவருடைய சிஷ்யப் பிள்ளைகள் செய்துவிடுவார்கள். அதிலும் தமிழ்நாட்டிலிருக்கும் குட்டி மகாத்மாக்கள் இப்பொழுதுகூட செய்துவருகிறார்கள். இது ஒரு அதிசயமா?

அதிசயம் சொல்லுகிறேன் கேளு; சேலம் ஸ்ரீமான் ஆதிநாராயணச் செட்டியாருக்கு வட ஆற்காடு ஜில்லாவிலே சட்டசபை மெம்பராயிருக்கிறது. இது எப்படிப்பட்ட சித்து பார்த்தாயா? அப்புரம் சென்னைக் கார்ப்பரேஷனைப்பாரு.—பார்த்தாயா? இன்னம் கேளு: இதுகளைவிட ஒரு பெரிய சித்து விளையாட்டு காட்டுகிறேன், பார்: ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாருக்கு இந்தியாச் சட்ட சபை மெம்பராயிருக்கிறது. இதைவிட இன்னம் என்ன பெரிய சித்து வேணும். இந்த சித்துகள் எல்லாம் அவருடைய பெயர் என்கிற மந்திரத்தைச் சொன்னதினாலேயே ஏற்பட்டது. இனி இந்த வருஷத்திற்கு அவருடைய சிஷ்யர்கள் குட்டி மகாத்மாக்கள் வேலைசெய்யப் போகிறார்கள். அப்பொழுது மகாத்மாவின் மகிமையை ஒருகை பார்க்கிறாயா?

ஓட்டக்காசு, உடைந்த சலங்கை, செல்லாக்காசு, செம்பு பித்தளைத் துண்டு இதுகள் எல்லாம் இந்தியாச் சட்டசபைக்கும் சென்னை சட்ட சபைக்கும் போய் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு அய்யம்மார் சொற்படி ஆடப்போகின்றதுகள். இதைவிட இன்னம் என்ன மகிமை வேண்டும்?

சா:—அடேயப்பா! இது போதாதா? போதும் போதும். மகாத்மாவின் பெயரைச் சொன்னாலே இவ்வளவு காரியம் நடக்கிறதா! இனி அந்த மகான் தங்களுக்கு சுவாதீனமாய் விட்டால் எவ்வளவு நடக்காது? சரி, சரி! இனிமேல் பேசுவதில்லை!

சட்டகோர்ட்

பத்திராதிபருக்கும் குடியானவனுக்கும் சம்பாஷணை.

—):O:(—

குடியானவன்:— அய்யா, பத்திராதிபரே! சில வக்கீல்கள் இரண்டு கக்ஷியிலும் பீசு வாங்குகிறார்களாமே, இது வாஸ்தவமா!

பத்திராதிபர்:— ஏன்? அதனாலென்ன தப்பிதம். ஒரு கக்ஷியில் பீசு வாங்கும்போது இரண்டு கக்ஷியில் வாங்கினாலென்ன! மூன்று கக்ஷியில் வாங்குகிற வக்கீல்கள் கூட இருக்கிறார்கள். அதனால் என்ன தப்பு?

குடியானவன்:— மூன்று கக்ஷியென்றால் என்ன? எனக்குத் தெரியவில்லையே.

பத்திராதிபர்:— இது தெரியாதா? வாதி, பிரதிவாதி, சாட்சி, ஆகிய மூன்று கட்சி.

குடியானவன்:— சாட்சி எதற்காகக் கொடுப்பார்?

பத்திராதிபர்:— சாட்சி திருடி இருப்பார்-ஜெயிலுக்குப் போயிருப்பார்-கடன்காரராயிருப்பார்-பொய் சாட்சி சொல்லியிருப்பார்-அதிகாரிகளுக்கு லஞ்சம் வாங்கிக் கொடுத்திருப்பார் இந்த வக்கீலைப்பற்றி ஏதாவது பேசியிருப்பார். இவைகளையெல்லாம் கட்சிக்காரர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு பப்ளிக் கோர்ட்டில் அவமானப்படுத்தாமல் இருப்பதற்காக சாட்சிகளும் வக்கீலுக்குப் பணம்கொடுப்பதுண்டு.

குடியானவன்:— இப்படி இரண்டு மூன்று பேரிடம் பணம்வாங்கினால் அது யோக்கியமாகுமா?

பத்திராதிபர்:— ஏன்? ஒருவனிடம் வாங்குவது மாத்திரம் எப்படி யோக்கியமாகும்? அந்தப் பணமும் அக்கிரமமாகத்தானே வாங்குகிறார்கள்.

ஏதோ பொய்யோ, புளுகோ, பித்தலாட்டமோ, தந்திரமோ செய்து அவனுக்கு கேசு ஜெயித்து கொடுப்பதாகத்தானே வாங்குகிறார்கள். இது எப்படி யோக்கியமாகும்? அதிகாரிகள் லஞ்சம் வாங்கிக்கொண்டு ஞாயவிரோதமாய்த் தீர்ப்புச் செய்வதற்கும், வக்கீல்கள்பணம் வாங்கிக்கொண்டு ஞாயவிரோதமாய்த் தீர்ப்புப்பெற பாடுபடுவதற்கும் வித்தியாசமிருப்பதாகஎனக்குத்தோன்றவில்லை. வக்கீல் ஞாயப்படி பேசுவானேயானால் அது ஒழுங்குதான். அப்படியானால் வக்கீலே வேண்டியதில்லை. உள்ளதை கட்சிக்காரனே அதிகாரியிடம் சொன்னால் நியாயப்படி நடந்துவிடுகிறது. வக்கீல் எதற்கு? ஒரு சமயம் சட்டம் எடுத்துக் காட்டுவதற்கு என்று சொல்லலாம்; சட்டம் இரண்டு கட்சிக்கும் தான் அனுகூல மாயிருக்கிறது. வாதி வக்கீல் ஒரு மதராஸ்சட்ட புஸ்தகம் காட்டினால் பிரதிவாதி வக்கீலும் ஒரு கல்கத்தா சட்ட புஸ்தகம் காட்டுவார். அப்பீலுக்குப் போனால் அங்கே பம்பாய், அலஹாபாத் அல்லது வேறு சட்டபுஸ்தகங்கள்;ஐகோர்ட்டுக்கு போனால் அங்கே சீமைப் புஸ்தகங்கள்

காட்டப்படும். இதனால்வக்கீலுக்குப் பணம் கொடுப்பதில் லாபமென்ன? சில ஊர்களில் ஒருவருக்கொருவர் சண்டைவந்து விட்டால் ஒருவன் சில போக்கிரிகளுக்குக் கள்ளு வாங்கிக்கொடுத்து மற்றவனை அடிக்கும்படி சொல்லுவதையும், அடிபட்டவன் அதேபோக்கிரிகளுக்கு சாராயம் வாங்கிக்கொடுத்து முதலில் அடிக்கச்சொன்னவனையே திருப்பிஅடிக்கச்சொல்லுவதையும் நாம் பார்க்கிறோமல்லவா? அதுபோல்தான் வக்கீல்கள் வைப்பதும். நான் பணம் கொடுத்தால் எனக்கு; நீ பணம் கொடுத்தால் உனக்கு; இரண்டுபேரும் பணம் கொடுத்தால் இரண்டுபேருக்கும். இதில் தப்பு என்ன?

கு:—அப்படியானால் வக்கீல்கள் இரண்டு கட்சியிலும் பணம் வாங்கக்கூடாது என்று சர்க்கார் சட்டமிருக்கிறதே, அதென்ன?

ப:—சர்க்கார் சட்டத்தைப்பற்றி கவலைப்படாதே. அதே சட்டத்தில் வக்கீல்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் எதுவும் பேசலாம் என்றிருக்கிறதே பார்த்தாயா? அல்லாமலும் இந்த கூட்டத்தில் இருந்து தானே சர்க்காரார் முனிசிப்பு முதல் ஐகோர்ட்டு ஜட்ஜு வரையிலும் பொருக்கி எடுக்கிறார்கள் என்பதும் அவர்கள்தான் இந்த சட்டத்தை நிறைவேற்றுகிறவர்கள் என்பதும் உனக்குத் தெரியாதா?

கு:—அப்படியானால் எப்படித்தான் நியாயம் கண்டுபிடிக்கிறது?

ப:—நியாயம் கண்டுபிடிக்கவேண்டும் என்கிற கவலை யாருக்கு இருக்கிறது என்று நினைக்கிறாய். வக்கீலுக்கும் இல்லை; அதிகாரிக்கும் இல்லை; சர்க்காருக்கும் இல்லை. சர்க்காரார் வக்கீல்களைக்கொண்டு சட்டம் செய்திருக்கிறார்கள். அந்த வக்கீல்களைக்கொண்டுதான் நிறைவேற்றுகிறார்கள். அந்த சட்டப்படி எல்லோரும் நடந்துகொள்ளவேண்டும். உதாரணமாக ஒருவன் மற்றவனுக்குப் பணம் கொடுக்கவேண்டும்; கோர்ட்டில் பிராது செய்தால் கொடுத்தவன் கொடுத்ததாய்ச் சொல்லுகிறான்; வாங்கினவன் வாங்கினதாய் ஒப்புக்கொள்ளுகிறான்; ஆனால் சட்டப்படி கொடுக்க வேண்டியதில்லையென்று விடுகிறது. அதுபோலவே ஒருவன் மற்றொருவனைக் கொன்று விடுகிறான். செத்துப்போனதும் நிஜம்; கொன்றதும் நிஜம். ஆனால் அவன் சட்டப்படி சாகவில்லை, சட்டப்படி ருஜுவாகவில்லை. ருஜுவானாலும் சட்டப்படி கொலை அல்ல என்று தீர்மானமாகிவிடுகிறது. இவைகளைப் பார்த்ததில்லையா? கோர்ட்டு என்றால் (லா கோர்ட்டு) சட்டக்கோர்ட்டுதானே! சட்டப்படி உண்டா இல்லையா என்று தானே பார்க்கிறார்கள். நியாயக்கோர்ட்டு அல்லவே! நியாயப்படி செய்தாரா இல்லையா என்று பார்ப்பதில்லையே; ஆதலால் வக்கீல்களைப்பற்றியும் குற்றம் சொல்லாதே; அதிகாரிகளைப் பற்றியும் குற்றம் சொல்லாதே; சர்க்காரைப் பற்றியும் குற்றம் சொல்லாதே; இதற்கெல்லாம் ஆதாரமாயிருக்கிற அய்யமார்களைத் திட்டவேண்டுமானால் சொல்லிக்கொள். இல்லாவிட்டால், இதெல்லாம் தெரிந்தும் மறுபடியும் உனக்கு புத்தி வரவில்லையே:

ஆதலால் உன்னையே வேண்டுமானால் சொல்லிக்கொள்.

கு:—அப்படியானால் கோர்ட்டுக்கு போவதே சுத்தப் பைத்தியக்காரத் தனம்தான் என்று படுகிறது. கடன் வாங்கினவனை கொன்றாலும் பாவமில்லை. அவனிடத்தில் வசூல் செய்வதாய் நினைத்துக்கொண்டு அனியாயமாய் வக்கீலுக்கும் சர்க்காருக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் அழுவது புத்தியில்லாத்தனம்தான் என்றும் படுகிறது. இதற்கு ஏதாவது வழி இல்லையா?

ப:—வழியென்ன? வக்கீல்கள் ஒழியவேண்டும். அவர்கள் ஒழிந்தால் முதலாவது சர்க்காரார் யோக்கியமாய் நடப்பார்கள்; ஜனங்களும் யோக்கியமாய் நடப்பார்கள்; நாட்டில் அக்கிரமம் அதிகமாய் நடக்காது.

கு:—அப்படியானால் பிறகு யேன் சர்க்காரார் வருஷத்துக்கு வருஷம் வக்கீல்களையும் கோர்ட்டுகளையும் அதிகப்படுத்திக் கொண்டே வருகிறார்கள்.

ப:—நமது நாட்டில் பார்ப்பார் என்று ஒரு ஜாதி இருக்கிறது. அதுதான் நமது அய்யர்மார்கள். அவர்களுக்கு உடலில் பலம் இல்லை; பாடுபட்டுத் தின்னக் கையாலாகாது; தலைமுறை தலைமுறையாய் ஊரான் முதலைத் தின்றே வழக்கம். அதுவும் நகத்தில் அழுக்குபடாமல் அதிகாரம்பண்ணியே தின்னுகிற பேர்வழிகள். அத்துடன் அவர்களுக்குக் கொஞ்சம் தந்திரமும் தெரியும். அதற்கேற்றாற்போல் நமக்கு வாய்த்த சர்க்காரோ, சொல்லவேண்டியதில்லை. இவர்கள் அய்யமாரைவிட ஒன்றும் நெம்பர் பேர்வழிகள். அய்யமாராவது இங்கேயே தின்று கழித்துவிடுகிறார்கள்; சர்க்காரோ மூட்டை கட்டிக்கொண்டு போகிற ஆசாமிகள். இவர்கள் இரண்டு பேருக்கும் அனுகூலமான ஒரு பிழைப்பு வேண்டுமானால் கூட்டுக்கொள்ளை அடிப்பதுபோல் இருக்கவேண்டும். ஆதலால் அதற்கேற்றது இந்த வக்கீல் பிழைப்பும், கோர்ட்டு களுந்தான். அதனால்தான் சர்க்காரும் இதை வளர்த்துக்கொண்டே போகிறார்கள்.

கு:—சர்க்காரும் பார்ப்பாரும் பிழைக்க நமது ஜனங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறதா? இது என்ன சர்க்கார்! இது என்ன பார்ப்பார்? இவர்கள் பிழைக்க நாம் கெடுகிறதா? இத்தனை அனியாயமா?

ப:—இதுதானா பெரிய அநியாயம்; கள்ளுக்கடை, சாராயக் கடையைப்பார். கள்ளு உற்பத்தி செய்வது நாம், விற்பது நாம், குடிப்பது நம், குடி கெடுவது நாம், இதனால் பிழைப்பது வக்கீல் என்கிற அய்யமாரும் சர்க்காரும் அவர்கள் உத்தியோகஸ்தர்களுந்தானே. இவ்வளவு பணமும் இவர்கள்தானே பங்கு போட்டுக்கொள்கிறார்கள்.

கு:—இதற்கு என்னதான் செய்வது?

ப:—என்ன செய்தாலும் முடியாது; மகாத்மா காந்தி சொன்னபடி செய்வதுதான் இதற்கு மருந்து.

கு:—மகாத்மா காந்தி இப்பொழுது வாவா என்னமோ ஒழவழ என்று போய்விட்டார்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே!

நமது நிருபர்களுக்கு.

நமது "குடி அரசு" மீது அன்புகொண்டு அடிக்கடி பற்பல முக்கிய விஷயம் பற்றிக் கட்டுரை வரைந்து வரும் அன்பர்களுக்கு, நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தமிழகத்தின் முன்னேற்றத்தில் ஆர்வங்கொண்டு எழுதப்பெறும் அவர்களின் ஒவ்வொரு வாக்கியத்தையும் போற்றுகிறோம்.

ஆனால் "குடி அரசு" க்கு விஷயதானம் செய்வோரில் பலர், நமது பத்திரிகை வாரப் பத்திரிகை யென்பதையும், சிறிய அளவில் பெரிய விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறதென்பதையும் அவர்கள் கருதுவதில்லை யென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. நமது கட்டுரைக்கர்த்தாக்கள் பக்கம் பக்கமாய் வரைந்த நீண்ட கட்டுரைகளை அனுப்பிவிடுகிறார்கள்.

நாள்தோறும் வரும் இக்கட்டுரைகளை மட்டிலும் பூராவும், பிரசுரிப்பதாக வைத்துக்கொண்டாலும் 12 பக்கங்களுக்கு மேலாகிவிடும். அக்கட்டுரைகளைச் சுருக்கி வெளியிடுவதென்றாலும் அதனை ஆக்கியோரின் கருத்து நன்கு காது போய்விடுமென அஞ்சவேண்டியிருக்கிறது. ஆகவே மிகுந்த மனவருத்தத்துடன் கஷ்டத்தோடு இத்தகைய கட்டுரைகளை தள்ளிவிட நேருகிறது.

ஆகையால் நமது நிருபநேயர்கள் அன்பு கூர்ந்து இனிவரையும் கட்டுரைகளை மிகச் சுருக்கி தெளிவாக இங்கியில் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே நன்று. ப—ர்.

பிழை திருத்தம்.

சென்ற வாரப் பத்திரிகையின் 7-ம் பக்கத்து மூன்றும் பத்தி 28-ம் வரியில் மகாத்மா காந்தி என்று பெரிய எழுத்தில் கோர்க்குமாறு நாம்பொறித்திருந்த குறிப்பை "மகாத்மா காந்தி" என்று எழுத்துக்கோர்ப்போர் செய்துவிட்டனர். தப்பர்த்தம் கொள்ளத்தக்க இக்குறி நம்மைய அறியாமல் கைப்பிசகாய் விழுந்து விட்டதென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ப:—இப்பொழுது வழவழ என்று இருந்தால் உனக்கென்ன? முன் அவர் சொன்னதும் எழுதினதும் அப்படியே தான் இருக்கிறது. இப்பொழுது அதில் ஒன்றும் எவருக்கும் சந்தேகமில்லை. ஆதலால் அந்தப்படி நடங்கள்.

கு:—அதெல்லாம் உங்களைப்போலொத்தவர்கள்தான் நடத்திவைக்கவேண்டும். நாங்களாக நடப்பதென்றால் ஆகக்கூடிய காரியமல்ல.

ப.—ஆகட்டும், இப்பொழுது என்னமோ இன்னும் 6, 7, மாதத்திற்கு நாட்டில் அயோக்கியர்களுக்கு கொஞ்சம் செல்வாக்கு அதிகமாக இருக்கும். பின்னால் எல்லாம் சரிப்பட்டுபோகும். பிறகு நீங்களாகவே நடந்து கொள்ளுவீர்கள்; சரி போய் வாருங்கள்.

அய்யங்கார் தர்மம்.

(ப)

(சித்திரபுத்திரன் எழுதுவது)

கோவை ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்கார் தர்மத்தின் இரகசியம் 'குடி அரசில்' வெளியானதினால் ஸ்ரீமான் ஐயங்கார் முதல் பல பிராமணர்களுக்கும், அவரது தர்மத்தில் பங்குகொண்ட-கொள்ள இருக்கும் சில பிராமணரல்லாத பத்திராதிபர்கள் பிரசாரகர்கள் என்போருக்கும் ஆத்திரங் கிளம்பிவிட்டது. தர்மத்தைப்பற்றி நமக்குப் பொறாமையா? யார் தர்மம் செய்வதாயிருந்தாலும், அது என்ன தர்மமாயிருந்தாலும், பொதுவாக உண்மைத் தர்மம் என்றாலே அதை வரவேற்பார்களே தவிர எவரும் அதை வெறுக்க மாட்டார்கள். ஆனால் பொது ஜனங்களை ஏமாற்றச்செய்யும் ஒரு சூழ்ச்சிக்கு தர்மம் என்று பெயர் கொடுப்பதானால் அறிவுள்ளவன்-யோக்கியன் பொதுஜனங்கள் ஏமாறும்படி பார்த்துக் கொண்டிருக்கவே மாட்டான். அப்படிப் பார்த்துக்கொண்டிருப்பவன் கோழையும் சுயநல வாதியுமே ஆவான்.

கோவை ஜில்லாவில் உண்மையான தர்மம்செய்த பிரபுக்களில்லாமலில்லை. உதாரணமாக கோவைக்கடுத்த பீளமேடு என்னும் ஊரில் ஸ்ரீமான்கள் பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அன் சன்ஸ் என்கிற பிரபல நாயுடு கனவான்கள் குடும்பம் இருந்துவருகிறது. அவர்கள் தக்க செல்வமுள்ளவர்கள் 20 லட்ச ரூபாய் மூலதனமுள்ள ஒரு பெரிய நூல் மில்லை நிர்வகித்து வருகிறார்கள். இவர்கள்பொதுஜன உபகாரத்தில்இறங்கினார்கள்.30, 40 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் கட்டினார்கள். அதற்குப்பதினாயிரக்கணக்கான பூமி விட்டார்கள். மாணவர்களுக்கு விடுதி (ஹாஸ்டல்) ஏற்படுத்தினார்கள். இளைஞர்கள் விவசாயமும் கைத்தொழிலும் கற்க ஒரு தொழிற்சாலையேற்பாடு செய்தார்கள். இதற்காக தங்கள் குடும்ப சொத்தில் ஒரு பாகத்தையும் தங்களுக்கு மில்லில் வரும் வருஷவாரி வரும்படியில் ஒருபாகத்தையும் இத்தருமத்திற்கு எழுதி வைத்தார்கள். இப்பொழுதும் கோயமுத்தூருக்கு யார் போனாலும் இவற்றைத் தெரிந்துகொள்ளலாம். இதில் இரகசியம் ஒன்றுமில்லை. இந்த தருமம் தாலூகா, ஜில்லா போர்டு எலக்ஷனுக்காகவோ சட்ட சபை எலக்ஷனுக்காகவோ அவர்கள் செய்யவில்லை.

இத்தருமம் செய்ததைக் கூலி கொடுத்து ஆள்வைத்து விளம்பரப்படுத்தவில்லை. அவர்களது தருமமும் தானாகவே வருஷக் கணக்காய் நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டேவருகிறது. சமீபத்தில் சென்னிமலை வேட்டுவபாளையம் பூசாரி என்கிற ஒரு பக்தர் பதினாயிரக்கணக்கான ரூபாய் பெறுமான சொத்தை தர்ம சாசனம் எழுதி அன்னியர் கையிலேயே ஒப்புவித்துவிட்டார். அதற்கு ஒரு விளம்பரமும் அவர் செய்யவேயில்லை.

இவற்றைவிட வெகு சமீபத்திலுள்ள கொடுமுடியில் ஸ்ரீமான் பெரியண்ணச்செட்டியார் என்கிற ஒரு கனவான் சில நாட்களுக்கு முன் 15,000 ரூபாய் பெறுமானமுள்ள பூமியும், 8,000 ரூபாய்க்கு கட்டடமும் கட்டிக்கொடுத்து, இப்போது மறுபடியும் 50,000 ரூபாய்க்கு மேல் பெறும்படியான சொத்துக்களை கொடுமுடி சங்கர வித்தியாசாலை என்கிற பள்ளிக்கூடத்திற்கு செட்டில்மெண்டு மூலம் எழுதிவைத்து சுவாதீனமும் செய்துவிட்டார். மேற்கொண்டு ரொக்கப் பணமாக 12,000 ரூபாய் ஸ்கூல் பண்டுக்குத் கொடுத்துமிருக்கிறார். இவர் எவ்வித திறப்பு விழாவும் அங்குரார்ப்பண விழாவும் செய்யவில்லை; விளம்பரமும் செய்யவில்லை. பத்திரிகைக்காரருக்குப் பணங்கொடுத்துப் போடச்சொல்லவுமில்லை. மகாத்மா காந்தி, பண்டித நேரு, ஸ்ரீமதி சரோஜனி முதலிய பெரியார்களுக்குத் தனது தர்மப் பெருமையை எழுதவுமில்லை. இப்படியெல்லாமிருக்க, கேவலம், ஒரு சட்டசபை ஓட்டுப்பெற—எதிர் அபேக்ஷகரைத் தோற்கடிக்க—இவ்வளவு தந்திரங்களும் மந்திரங்களும் செய்தால் செய்தவர் மிகப் பெரியவராய்ப் போய்விடுகிறார், அதை வெளியில் எடுத்துச் சொல்லுபவர் அயோக்கியர்களாய்ப் போய்விடுகிறார்கள் என்றால் மக்கள் நிலையை என்னவென்று சொல்லுவது.

ஸ்ரீமான் ஐயங்காரைப்போல் தைரியமாய் தர்ம விளம்பரம் செய்ய எவராவது பின் வாங்கினால் அவர்கள் தோல்வியுற வேண்டியதா? இந்த தைரியத்திற்காக மாத்திரம் ஐயங்கார் வெற்றியுற வேண்டியதா? சட்டசபை மெம்பராவதற்கு இந்த தைரியம்தானா யோக்கியதை? ஸ்ரீமான் ஐயங்கார் இவ்வளவு விளம்பரம் ஏன் செய்ய வேண்டும் இவரும் இரண்டு தடவை-ஆறு வருஷகாலம்-சட்டசபைப் பதவியை அடைந்து அனுபவித்தாய்விட்டது; இனி வேறொருவர் தான் அனுபவிக்கட்டுமே: யார் வீட்டு சொத்து. இந்த ஜில்லாவில் 60,000 ஓட்டர்கள் இருந்தால் சுமார் 3,000 ஓட்டர்கள் கூட பிராமணர்கள் இருக்கமாட்டார்கள். 57,000 பிராமணரல்லாத ஓட்டர்கள் இருக்கும் ஒரு ஸ்தானத்திற்கு 3,000 ஓட்டுள்ள பிராமணர் எத்தனை தடவை அந்தப் பதவியை அனுபவிப்பது? ஆறு வருஷம் பார்த்தது போதுமென்று இவர் ஏன் கௌரவமாய் விலகிவிடக்கூடாது? கோயமுத்தூர் ஜில்லாவில் சட்ட சபைப் பதவியை அனுபவிக்க இவரைவிட வேறுநபர்கள் இல்லையா? கேவலம் இந்தப் பதவி பெற இவ்வளவு தந்திரம் செய்து 57,000 பேரையும் ஏமாற்றி சட்ட சபைக்குப் போகிறவர், போனபின் இவரால் ஜனங்கள் என்ன பலன் அடைய முடியும்? இம்மாதிரி பேராசையுள்ளவர்கள் எவ்வளவுகாலத்திற்கு ஜனங்களை ஏமாற்ற முடியும். ஸ்ரீமான் ஐயங்கார் விளம்பரமும் வெற்றியும் ஏதாவது சாமர்த்தியத்தையும், சக்தியையும், தேச பக்தியையும், நாணயத்தையும், தகுதியையும் பொறுத்திருக்கிறதா? ஸ்ரீமான் ஐயங்கார் பணத்தையும், தந்திரத்தையும், விளம்பரத்தையும் பிராமணரல்லாதார் சமூகத்துரோகத்தையும் அவர்களது முட்டாள் தனத்தையும் தானே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதை உத்தேசித்துத் தானே அனுபவசாலிகள், அரசியலில் பணத்திமிரும், தந்திரமும், சூழ்ச்சிவிளம்பரமும், சமூகத்துரோகமும், அறியாமையால் நேரும் கஷ்டமும், ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படவேண்டும் என்று கதறுகிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டிருந்தால் ஸ்ரீமான் ஐயங்கார் 6 வருஷம் அனுபவித்துவிட்டு இன்னும் 3 வருஷத்திற்கு இவ்வளவு விளம்பரம் செய்வாரா? முதலாவது, ஒரு வருஷத்திற்காவது இவருக்கு முறை வருமா? 30 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் செலவு செய்தாலும் கிடைத்து விடுமா? 2 லக்ஷமல்ல, 10லக்ஷம் என்று தர்ம விளம்பரம் செய்தாலும் ஆகிவிடுமா? கோயமுத்தூர் ஜில்லாவானது தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஜில்லா. ஸ்ரீமான் ஐயங்காரைப்போல் எத்தனையோ பணக்காரரும் பட்டக்காரரும் ஜமீன்தாரரும் சக்தியுள்ளவர்களும், அவரைவிட தகுதியும் உரிமையுமுள்ளவர்களுமிருக்க ஐயங்காரே அடிக்கடி வரவேண்டுமென்பது "வேதக்கட்டளையா, சாஸ்திர சம்மதமா, மனு தர்மமா?" இந்த ஒரு சிறு பதவியே பிராமணரல்லாதார் 100-க்கு 97 பேர் உள்ள சமூகத்தை இவ்வளவு மோசம் செய்யுமானால் இன்னும் பெரிய பதவிகள்- சுயராஜ்யப் பரிபாலனம் போன்ற ராஜா மந்திரி பதவிகள்- இன்னும் எவ்வளவு மோசத்தை விளைவிக்காது? தவிறவும் இந்த நியாயமான சங்கதியை நாம் எழுதும்போதே ஸ்ரீமான் ஐயங்காருக்கும் அவரது சிஷ்ய கோடிகளுக்கும் சிப்பந்தி கோடிகளுக்கும் இவ்வளவு ஆத்திரமும் கோபமும் மன வருத்தமும் வருமானால், தமிழ் நாட்டிற்கே ஏன்- இந்தியா தேசத்திற்கே ராகு கேதுகள் போல இருக்கும் பிராமணப் பத்திரிகைகளும், பிராமணப் பிரசாரகர்களும், அவர்களால் ஆட்கொள்ளப்பட்ட பிராமணரல்லாத பிரசாரகர்களும் உண்மைக்கு விரோதமாய் இரவும் பகலும் பிராமணரல்லாதார்மீது பொய்யும், பித்தலாட்டங்களும் சொல்லி விஷமப் பிரசாரம் செய்கின்றார்களே, அதனால் பிராமணரல்லாதார்களுக்கு எவ்வளவு சங்கடமும், ஆத்திரமும், கோபமும் வராது? "குடி அரசு" போன்ற பத்திரிகையாவது சுமார் 10 பிராமண சந்தாதாரர்களைக்கூட உடைத்தானதாயிருக்காது. அதிலும் 7 பேர் கௌரவ சந்தாதாரர்களாயிருப்பார்கள், 'சுயராஜ்யா' 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகள் பிராமணரல்லாதார் பணத்திலேயே நடக்கிறது. பிராமணரல்லாதார் தங்கள் பணத்தையே கொடுத்து தங்கள் சமூகத்தையே பாழாக்குவதற்கு உடந்தையாயிருப்பதுபோல் அவைகளுக்கு சந்தாதாரர்களாயிருக்கிறார்கள். இதைக் கேட்பவர்களுக்கு எவ்வளவு மனவேதனை ஏற்படும். ஒவ்வொரு நாளும் இந்தப் பத்திரிகைகளில் பிராமணரல்லாதார்களைப்பற்றி எழுதும் பொய்யும் புளுகும் கணக்கு வழக்கில்லை. அதைக் கவனிக்கவோ, திருத்தவோ, கோபப்படவோ, ஆத்திரப்படவோ ஆளில்லை. "குடிஅரசு" உண்மையை-தன்மனதிற்கு உண்மையென்று பட்டதை-எழுதினால் இதற்கு இவ்வளவு அடாதுடியா?

ஸ்ரீமான் ஐயங்காருக்குத்தான் பணமிருக்கிறது; பத்திரிகைகள் இருக்கின்றன; பணம் வாங்கிக்கொண்டு பேசவும் எழுதவும் ஆளுகள் இருக்கிறார்கள். இதனால் எவ்வளவு அக்கிரமம் செய்தாலும் தாராள

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-௵ சித்திரை-மீ ௨௭-௳

சபர்மதி ராஜியின் முறிவு.

———)o(———

சுயராஜ்யக் கட்சியாருக்கும் பரஸ்பர ஒத்துழைப் பாளர்களுக்கும் வெளிப்படையாய் உள்ள வித்தியாசமெல்லாம் கவர்ன்மெண்டார் இணங்கி வந்தால் 1,000, 5,000 சம்பளமுள்ள உத்தியோகங்களை ஏற்றுக் கொள்வதென்பது முன்னவருக்கும், கவர்ன்மெண்டார் எவ்வளவு இணங்கி வருகிறார்களோ அவ்வளவுக்குத் தகுந்தபடி 1,000, 5,000 சம்பளமுள்ள உத்தியோகங்களை ஏற்றுக்கொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்வதென்பது பின்னவருடையதுமான வெளிப்படை கொள்கைகளாகும். இந்தக் கொள்கைக்கும் மிதவாதம், ஜஸ்டிஸ் பெசண்டமையார் ஆகியோர்களுடைய கட்சிக் கொள்கைக்கும் யாதொரு விதமான வித்தியாசமும் வெளிப்படையாகவுமில்லை, இரகசியமாகவுமில்லை. சுயராஜ்யக் கட்சிக்கும் மேற் கண்ட மற்ற கட்சிகளுக்கும் அந்தரங்கத்தில் யாதொரு விதமான வித்தியாசமுமில்லை. சுயராஜ்யக் கட்சி “சாத்தூரில் மல அமுது விழுந்து விட்டது, வழிகட்டினைப்போல் வாறு” என்பது போல் கவர்ன்மெண்டார் இணங்கி வந்தால் உத்தியோகம்ஏற்றுக்கொள்வதென்று சொல்வது, ஓட்டர்களை ஏமாற்றுவதற்கு தமிழ் நாட்டு ஐயங்கார் கோஷ்டிகள் செய்த சூழ்ச்சியேயல்லாமல் வேறல்ல. ஏனென்றால் அவர்கள் தமிழ்நாட்டில் ஜஸ்டிஸ் கட்சியாரைப் போலவும், மிதவாதக் கட்சியாரைப் போலவும், தாங்களும் உத்தியோகம் பெற்றுக்கொள்ளுவதற்கு வந்து விட்டோமென்று சொன்னால் பாமர ஜனங்கள் ஏமாறமாட்டார்கள் என்று நினைத்து அதற்காக கண்டு பிடித்த தந்திரமாகும். இந்த தந்திரக்காரரே சுயராஜ்யக் கட்சியிலும் காங்கிரசிலும் ஆதிக்கம் செலுத்துகிறவர்களானதினால் அவர்களின் தங்கள் தந்திரங்களை நிறைவேற்றிக்கொண்டார்கள். பம்பாய்க்காரரும் மகாராஷ்டிரக்காரரும் இவர்களைப் போலவே உத்தியோக வேட்டைக்காரர்களானதினாலும், அங்குள்ள பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்கு இவ்வளவு தந்திரம் வேண்டியதில்லையானதினாலும், அவர்கள் இவர்களுடைய தந்திரத்தைவெளிப்படுத்த முன்வந்தார்கள். அவர்கள் சட்சி வலுக்க ஆரம்பிக்கவே அவர்களை எதிர்த்து நிற்க யோக்கியதையில்லாத சுயராஜ்யக் கட்சியார், பம்பாய்-மராட்டா மகாணக்காரர்களின் காலுக்குள் நுழைந்து அவர்களுடன் ராஜி செய்துகொள்ள சபர்மதி ஆச்சிரமத்தின் பெயரையும், மகாத்மாவின் பெயரையும் உபயோகப் படுத்திக்கொண்டு ‘புதுத் திருடன்’ ‘பழைய திருடன்’ ஆகிய இருவரும் இனி மேல் திருடப் போவதில்ஒரேமுறையைத்தான் உபயோகப் படுத்திக்கொள்ளவேண்டுமே தவிர, ஆளுக்கு ஒரு முறையை அனுசரித்து ஒருவருக்கொருவர் காட்டிக்கொடுக்கலாகாது என்ற ராஜிக்கு வந்தார்கள். இந்த ராஜியை, மேற் கண்ட திருட்டில் பங்குள்ளவர்களெல்லாம் ஆனந்தமாய்ப் பாராட்டினார்கள். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள பங்குக்காரர்களுக்கு இதற்கு முன்னமேயே மூக்கு அழுகிப்போயிருந்தபடியினால் இந்த ராஜியைப் பாராட்ட ஆரம்பித்தால் மூக்கில் புழு உண்டாகிவிடுமோவென்று அஞ்சி அந்த ராஜியை ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்கள்போல் பொய்யழுகை அழுதார்கள்.

தமிழ்நாட்டுக்குப் பெரிய சந்தோஷ சமாச்சாரம் கொண்டுவருவதுபோல் இந்த ராஜிச் சங்கதியைக் கொண்டுவந்த ஐயங்கார் கோஷ்டிக்குத் தமிழ்நாட்டுப் பங்குக்காரர்களின் அழுகை பெரிய ஆபத்தை உண்டாக்கிவிட்டது. இவ் “வெச்சரிக்கை” யைத்தூக்கிக் கொண்டு மறுபடியும் ஆமதாபாத்துக்கு ஓடினார்கள். தலைவர் பண்டிதநேருவைப் பிடித்து ஒரு காரணம் போடச் சொன்னார்கள். அவர் அப்படியே ஒரு அந்தர் அடித்தார். இவ் வந்தரை ஜெயக்கர் கெல்க்கர் கூட்டத்தார் மதிக்காமல் அவரவர் கையாலானதை அவரவர் பார்த்துக்கொள்வதென்பதன் முடிவின்பேரில் ராஜி முறிந்தது என்கிற பெயரோடு கலைந்துவிட்டார்கள். இந்த ராஜி முறிவுக்குப் பண்டித நேரு ஒரு சமாதானம் சொல்லுகிறார். அது எதுபோலென்றால், தேங்காய் திருடுவதற்காக ஒரு திருடன் தென்னைமரத்தின்மேல் ஏறினான்; மரக்காரன் கண்டுகொண்டவுடன் திருடன் தானகவே கீழே இறங்கி வந்தான். மரக்காரன் திருடனைப்பார்த்து என் மரத்தின்மேல் ஏறிய் என்று கேட்டான்; திருடன் கன்றுக்குட்டிக்குப் புல்லுப் பிடுங்கப் போனேன் என்று சொன்னான். மரக்காரன் தென்னை மரத்தின்மீது புல் ஏது வென்று கேட்டான். திருடன் அதனால்தான் கீழே இறங்கி வந்துவிட்டேன் என்று சொன்னான். அதைப் போல் பண்டித நேரு என்கிற பிராமணர் சமாதானமும், தமிழ்நாட்டு ஐயங்கார் என்கிற பிராமணர் சமாதானமுமிருக்கிறது. பண்டித நேரு யோக்கியமான நிலைமையில் இந்த சமாதானம் செய்துகொண்டிருப்பாரேயானால் தனது சமாதானத்தை தன்னைப் பின்பற்றுவோர் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொன்னவுடனே தலைமைப் பதவியிலிருந்து விலகியிருப்பார். இதுதான் சுயமரியாதைக்கு லக்ஷணம். அதைவிடுத்து ‘நான் அப்படி நினைத்தேன்’, ‘இப்படி நினைத்தேன்’, ‘கன்றுக்குட்டிக்குப் புல்லுப் பிடுங்கப் போனேன், இல்லாதலால் திரும்பி வந்துவிட்டேன்’ என்று சொல்லுவது சுயராஜ்யக் கட்சியின் யோக்கியதையைப் பற்றியும் அது பிராமணருடைய கட்சி யென்பதாகவும் அது யோக்கியமான கட்சி அல்லவென்றும் நாம் இதுவரையிலும் எழுதியும் பேசியும் வந்ததை வெட்ட வெளிச்சமாய் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது என்றே திருப்தி அடைகிறோம்.

ஒத்தக்காசுச் செட்டியார்.

பிராமணத் தந்திரத்தின் தோல்வி.

பனகால் ராஜா மந்திரியாயிருந்து மாதம் ரூ. 4333—5—4 சம்பளம் வாங்குவதில் பொறாமை கொண்ட சில பிராமணர் பனகால் ராஜா கட்சியிலிருந்தே ஆசாபங்கமடைந்த ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியார் என்கிற ஒருவரைப் பிடித்து பனகால் ராஜாவின் மீது ஏவி விட்டு, திரை மறைவிலிருந்து சூஸ்திரக் கயிராட்டி வந்தார்கள். அளவுக்கு மிஞ்சி கயிற்றை ஆட்டினதன் பலனாய்க் கயிறு அறுந்துபோய் ஸ்ரீமான் செட்டியாரின் தலை உடைந்து நிரந்தரமான வடு இருக்கும்படியாய் ஒரு பெரிய தழும்பு ஏற்பட்டுவிட்டது. விஷய மென்ன?

பனகால் ராஜாவை ஸ்ரீமான் செட்டியார் ஒரு கூட்டத்தில் இகழ்ச்சியாய்ப் பேசினார்; மற்றொரு கூட்டத்தில் ஸ்ரீமான் செட்டியாரை பனகால் ராஜா இகழ்ச்சியாய்ப் பேசினார். இது அரசியல் உலகில் சாதாரணமாய் நடக்கிற விஷயங்கள்தான். அனாவசியமாய் இந்த சம்பவத்தில் பிராமணர்கள் புகுந்து செட்டியாருக்கு ஏதோ பெரியமான நஷ்டம் வந்து விட்டதாகவும், அதற்காக சில பிராமணர்கள் பரிதாபப் பட்டு ஸ்ரீமான் செட்டியாருக்கு ஏதோ பெரிய பரிகாரம் தேடிக் கொடுத்து விடுவதாகவும் பாசாங்கு செய்து, நீதி ஸ்தலத்திற்கு இழுத்துவிட்டு, செட்டியாருக்கு என்றென்றைக்கும் நிரந்தரமாய் மான நஷ்டம் வராமல் செய்துவிட்டார்கள். (அதாவது கொஞ்சமாவது மானமிருக்கும்படியாகச் செய்திருந்தால் தானே இனிமானநஷ்டம் வரும்.)

தீர்ப்பின் தத்துவம்.

பனகால் ராஜா செட்டியாரை (கூலிக்கு மாரடிப்பது) என்று சொன்னது நிஜம். செட்டியார் பேசினதற்கு பனகால் ராஜா பதில் பேச வேண்டியதுதான். ஜஸ்டிஸ் கட்சியாரிடமிருந்து செட்டியார் ரூ. 5,000 வாங்கினதும் நிஜம். செட்டியார் அதை வாங்கவில்லை என்று சொல்லுவது பொய்யும் யோக்கியப் பொறுப்பற்றது மாகும். செட்டியாருக்கும் அவரது புதல்விக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியார் உத்தியோகம்கொடுக்காததினால் கோபம்வந்துவிட்டதாய்த் தெரிகிறது. ஸ்ரீமான் செட்டியாருடைய மான நஷ்டம் தேசத்திலே நடமாட்டமுள்ள சின்ன நாணயமான ஒரு பைசாவுக்குத் தான் சமானமானதாகும். இந்த மாதிரி பனகால் ராஜா பேசுவதற்கு ஸ்ரீமான் செட்டியாரே இடங் கொடுத்தவரானதினாலே செலவு தொகைக் கொடுக்கப்படமாட்டாது, என்கிற தத்துவங் கொண்ட தீர்ப்பை அளித்து விட்டார். இதனால் என்ன விளைந்தது? பனகால் ராஜா

சுயராஜ்யக் கட்சியார்.

கார்ப்பரேஷனில் செய்த வேலை.

சுயராஜ்யக் கட்சியார் என்கிற பிராமணர்கள் சென்னைக் கார்ப்பரேஷனைக் கைப்பற்ற ஆட்களை நிறுத்தி ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரை சுவாதீனம் செய்து கொண்டு மூலை முடுக்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாரை வைது பிரசங்கம் செய்த காலத்தில் தாங்கள் மிகுதியும் யோக்கியர்கள் என்றும், ஜஸ்டிஸ் கட்சியார் தேசத்துரோகிகள் என்றும், கார்ப்பரேஷனுக்குத் தாங்கள் மெம்பர்களானால் ஜனங்களுக்கு அதிக அனுகூலம் செய்வோம் என்றும், வரிகளைக் குறைப்போம் என்றும் பொய் மூட்டைகளை அளந்தார்கள். இப்பொய் மூட்டைகளை ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரும் தலையில் தூக்கிக்கொண்டுபோய் ஓட்டர்கள் வீட்டில் கொட்டினர். இப்பொய்யர்கள் வெற்றி அடைந்து கார்ப்பரேஷன் மெம்பர்களான பிறகு அவர்கள் யோக்கியதை என்ன என்பதை சென்னை வியாபாரிகள் சங்கத்தாரால் செய்த தீர்மானங்களிலிருந்தே பொது ஜனங்கள் அறிந்து கொள்ளலாம்.

அதாவது:—

> வியாபார சுணக்கத்தால் வியாபாரம் நடப்பதே கஷ்டமாயிருக்கும்போது வியாபாரிகளின் தொழில் வரியைக் கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள் 100-க்கு 25-வீதம் அதிகமாக உயர்த்தியதை இச் சங்கம் பலமாகக் கண்டிக்கிறது என்றும், வரி உயர்வு தீர்மானத்தை இந்தடிவிஷன் கவுன்சிலரே ஆமோதித்ததையும் பிரஸிடெண்டு இதற்கு அனுகூலமாய் ஓட்டுக் கொடுத்ததையும் இம்மகா நாடு இன்னும் பலமாய்க் கண்டிக்கிறது.........இந்தடிவிஷனின் சுகாதார நிலைமை மிகக் கேவலமாயிருப்பதற்காகவும், இதை கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள் கவனிக்காமலிருப்பதற்காகவும் இச் சங்கம் வருந்துகிறது.

என்று தீர்மானித்திருக்கிறார்கள். சுயராஜ்யக் கட்சியார் எலக்ஷன்போது ஓட்டர்களிடம் கொடுத்தும் வாக்குத்தத்தத்திற்கும் அதன்பிறகு அவர்கள் நடந்து கொள்ளும் யோக்கியதைக்கும் அவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்கும் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் யோக்கிதைக்கும் இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும். கார்ப்ரேஷனில் வரி, சுகாதாரம் என்னும் இரண்டு முக்கிய காரியம் உண்டு. இந்த இரண்டு முக்கிய காரியத்திலும் இவர்கள் யோக்கியதையைப் பார்த்த ஓட்டர்கள் இனியாவது சுய புத்தியுடன் நடப்பார்களா?

...க்குச் கொஞ்சம் பணம் செலவாயிற்று ஸ்ரீமான் செட்டியாருக்கு என்றென்றைக்கும் மான நஷ்டம் ஏற்படாமலாயிற்று. பிராமணர்களுக்கு வேடிக்கை பார்த்தது மிச்சம்.

ஒருவரிடம் பணம் வாங்கிக்கொண்டு மற்றொருவரை திட்டினாலென்ன, ஒருவர் பணங்கொடுக்காததற்காக அவரை திட்டினாலென்ன? ஆகவே எப்படியும் பணத்திற்காக திட்டினதாய் நீதிபதியின் தீர்ப்பிலிருந்து தொனிக்கிறது. இந்த வழக்கை விசாரித்த ஜட்ஜ் வெள்ளைக்காரராயில்லாமல் கருப்புக்காரராயிருந்தால் என்னவாகியிருக்குமென்பதை வாசகர்களையே அறிந்து கொள்ள விட்டு விடுகிறோம்.

எங்கும் இராமசாமி நாயக்கர்.

பம்பாயில் பிராமணரல்லாதார் மகாநாடு.

சென்னை மாகாணப் பிராமணர்கள் சென்னையில் மாத்திரம்தான் பிராமணர்-பிராமணரல்லாதார் வித்தியாசமும் 'வகுப்புத் துவேஷமும்' ஏற்பட்டிருப்பதாகவும், அதை ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் வளர்த்துவருவதாகவும், அவர் பேச்சை எவரும் கேட்கக்கூடாது என்றும், அவர் சொல்லுவதை எவரும் நம்பக்கூடாது என்றும் அவர் பேரில் பல குற்றங்களைக் கற்பித்து பிராமணர்களும் பிராமணப் பத்திரிகைகளும் அவர்களைத் தலைவாகக்கொண்ட ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களும், அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு எழுதும்-பேசும் சிப்பந்தி கோடிகளும் அவர்கள் தயவால் பதவிபெற நினைக்கும் சில சுயகாரியப்புலிகளும் சதா காலமும் கையொடிய தொண்டைகிழிய எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

இப்பொழுது மத்திய மாகாணத்திலும் (மகாராஷ்ட்டிர மாகாணத்தில்) பம்பாய் மாகாணத்திலும் பிராமணரல்லாதார் மகாநாடுகள் என்றும், "வகுப்புத் துவேஷங்கள்" வளர்ந்து வருகிறது. பஞ்சாபிலும் கல்கத்தாவிலும் இந்து முஸ்லீம் சச்சரவுகள் இல்லாவிட்டால் அங்கும் பிராமணர்-பிராமணரல்லாதார் "வகுப்புத் துவேஷங்கள்" வளரும். ஆதலால் இராமசாமி நாயக்கர் சென்னையில் மாத்திரம் இல்லை. இந்தியாவெங்கும் இராமசாமி நாயக்கர் மயமாய்த்தான் இருக்கிறது. சென்னையில் 4 பேர் கூலிக்கு மாரடிப்பதால் இராமசாமியை ஒழித்துவிடமுடியாது.

சின்னாட்களுக்குமுன் இவர்கள் சென்னையில் சில காலிகளை ஏவிவிட்டு ஸ்ரீமான் சர். தியாகராயச் செட்டியாரை அடிக்க முயற்சித்து அவர் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் முதலியவற்றையும் உடைத்தார்கள். அதிலும் இந்த இயக்கம் அழிந்துவிடவில்லை. அதற்குப் பிறகு ஸ்ரீமான் சுரேந்திரநாத் ஆரியா அவர்களையும் அடிக்கும்படி செய்தார்கள். அதனாலும், இவர்களுக்குப் பயந்துகொண்டு இயக்கம் போய்விடவில்லை. சமீபத்தில் பேரார் மாகாணத்தைச் சேர்ந்த அமராவதியில், 2-வது அகில இந்திய பிராமணரல்லாதார் காங்கிரசின் காரியதரிசியாயும் பிராமணரல்லாதாரின் போருழைப்பாளராகவுமிருக்கும் ஸ்ரீமான் அமிர்த்காரை சில காலிகளைக் கொண்டு பலமாய் அடித்துவிட்டார்கள். இதனாலும் பிராமணரல்லாதார் இயக்கம் ஒழிந்துவிடவில்லை. இவர்கள் கெட்ட எண்ணங்கொண்டு தூற்றத்தூற்ற, அடிக்க அடிக்க பந்து கிளம்புவதைப்போல் இயக்கம் இந்தியாவெங்கும் கிளம்பி பரவிக்கொண்டுதான் வருகிறது.

திவான்கள்.

திருவாங்கூர் மகா ராஜா ஒரு கிறிஸ்த்துவ திவானையும், மைசூர் மகாராஜா ஒரு மகமதிய திவானையும் தங்களது அரசாங்கங்களுக்கு நியமித்திருக்கிறார்கள். யுகாந்தர காலமாய், தலைமுறை தலைமுறையாய் பிரர்மணர்களுக்கு வேதத்தில் இருந்தே ஏற்பட்ட இந்தப் பதவிகள் இப்போது கிறிஸ்த்துவருக்கும் மகம்மதியருக்கும் கிடைத்த பெருமை எவருக்குச் சேரும்? டாக்டர் நாயருக்கும் சர். பி. டி. செட்டியாருக்கும் சேருமா? அல்லது திரு. வி. க. முதலியாருக்குச் சேருமா?

கோயமுத்தூரில் பஞ்சநிவாரண வேலையும் ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்காரும்.

கோயமுத்தூரில் பஞ்ச நிவாரண வேலைக்காக ரூ. 2102-8-0 செலவாகியிருக்கிறது. கிராமத்து ஜனங்கள் இந்தப்பணம் ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்கார்தான் கையிலிருந்து செலவு செய்ததாக நினைக்கும்படி பல தந்திரங்கள் செய்ததோடு சில காங்கிரஸ் தொண்டர்கள் என்போரும் ஸ்ரீமான் ஐயங்கார் பின் சென்று ஓட்டுவாங்க, பஞ்சப்படி போட்ட ஐயங்கார் என்று அவருக்குப் பெயர் வாங்கிக் கொடுத்து கிராமத்து ஜனங்களை ஏமாற்றியிருக்கிறார்கள். இதன் இரகசியம் என்ன வென்றால் பஞ்ச நிவாரண வேலைக்காக பொது ஜனங்களிடம் இருந்து வசூலாகி வந்த பணத்தை ஸ்ரீமான் எஸ். சினிவாசய்யங்கார் தூக்கி ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காரிடம் கொடுத்து, செலவு செய்யும்படி சொல்லியிருக்கிறார். அந்தப் பணத்தை வாங்கித்தான் செலவு செய்ததாக அவர் நடித்திருக்கிறார். இந்த நடிப்புக்கு காங்கிரஸ் தொண்டர்கள் திரைப்பிடித்து இருக்கிறார்கள். இவ்வளவுதான் இரகசியம். இதை 3-5-26-வ "சுதேசமித்திரன்" பத்திரிகையிலேயே பார்க்கலாம்.

இந்து மகா சபை.

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகிவிட்டால் நமது சர்க்காருக்கு எவ்வளவு சங்கடமோ, அதைவிட அதிக சங்கடம் நமது பிராமணர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஏனெனில் சிறுவகுப்பாயுள்ளவர்கள் வாழவேண்டுமானால் பெருவகுப்பாயுள்ளவர்களை ஒருவருக்கொருவர் உதைத்துக்கொள்ளும்படி செய்து பிரித்து வைத்தால்தான் முடியும் என்பது ஒரு பழமொழி. அப்பழமொழிக்கிணங்கவே சர்க்காரும் பிரித்தாள பல தந்திரங்கள் செய்து அதில் வெற்றிபெற்று வருகிறார்கள். அது போலவே நமது பிராமணர்களும் பிராமணரல்லாதாரை அடக்கியாள அவர்களுக்குள் பிரிவினையுண்டாக்கி ஒருவருக்கொருவர் துவேஷமும் பொறாமையும் நிரந்தரமாய்க் கொள்ளும்படி பல தந்திரங்கள் ஆதியிலிருந்தே செய்துவந்திருக்கிறார்கள். அவைகளின் குறிப்புதான் இன்றையதினம் இந்தியாவைக் காட்டிக்கொடுக்கும் வர்ணாசிரமும் பஞ்சமர் என்னும் ஜாதியும்.

இதை மகாத்மா எப்படியாவது ஒழித்துவிடுதலை சம்பாதிக்கலாம் என்று எண்ணியவுடன், நமது பிராமணர்கள் புது தந்திரம் ஒன்று செய்திருக்கிறார்கள். அது தான் "இந்து மகா சபை" அது இந்துக்களை மாத்திரம் நிரந்தரமாய்ப் பிரித்து வைப்பதோடல்லாமல் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் நிரந்தரமாய் ஏற்படாமலிருப்பதற்கு செய்த சூழ்ச்சியாகும். தற்காலம் தேசமெங்கும் ஏற்பட்டிருக்கும் இந்து முஸ்லீம் கலவரத்திற்கு இந்து மகா சபையே காரணம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். தற்கால பிராமணீயம் உள்ளவரை தேசம் உருப்படப்போவதில்லை என்பது நிதர்சனமாகி வருகிறது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாய்ப் பெரியமனிதராய் விடுகிறார். இவைகள் இல்லாதவர்கள் கதி என்ன ஆவது? எவ்வளவு யோக்கியர்களா யிருந்தாலும், தேச பக்தர்களாயிருந்தாலும் அவர்கள் யோக்கியதை வெளிவருவதற்கில்லை. வெளிவாராவிட்டாலும் அவசியமில்லை; அவர்களுடைய தொண்டு தேசத்திற்குப் பிரயோஜனமில்லாததோடு அயோக்கியர்கள் செய்கையும் அயோக்கியத்தனமும் உலகத்தில் மதிக்கப்பட்டு மலிந்துபோகிறதே என்பதுதான் நமது உண்மையான சங்கடம். அல்லாமலும், தென்னாட்டில் தென்னாட்டாரின் பிரதிநிதிகள் ஸ்ரீமான்கள் சென்னை எ. ரெங்கசாமி ஐயங்கார், எஸ். சீனிவாச ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்திஐயர் எம். கே. ஆச்சாரியார் கோவை சி. வி. வெங்கட்டரமணய்யங்கார், கும்பகோணம் சக்கிரவர்த்தி ஐயங்கார் ஆகிய இவர்கள்தானா? இவர்களைவிட யோக்கியர்களும் தேசபக்தர்களும் வேறு எவரும் நமது நாட்டில் இல்லையா? இவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு பேசுகிறவர்களும் எழுதுகிறவர்களுந்தானா 'தேசத்தொண்டர்' 'தேசபக்தர்.' இவர்களுக்கு எப்படி இந்தப் பதவி வந்தது? பணமும் பத்திரிகையும் தங்கள் கைவசமிருப்பதோடு, யோக்கியமற்ற வழியில் செலவிடுவதும் எழுதுவதுமான குணத்தினால்தானா, அல்லவா?

தமிழ் நாட்டின சார்பாக சபர்மதி ராஜி ஒப்பந்தத்திற்குப் போயிருப்பவர்கள் எத்தனை பேர்? ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரெங்கசாமி ஐயங்கார், சத்திய மூர்த்தி ஐயர் ஆகிய இவர்கள் செய்து வரும் ராஜியை ஒப்புக்கொள்ளவாவது இவர்களை யோக்கியர்களென்று சொல்லவாவது தமிழ் நாட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள். இவர்களைத்தலைவர்கள் என்று சொல்லும் நமது ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரையே சத்தியமாய்க் கேட்போம். இவர்கள் தலைவர்களா? இவர்களை யோக்கியர்கள் என்று அவர் கருதுகிறாரா? இவர்கள் சொற்படி நடக்க தயாராயிருக்கிறாரா? ஒன்றிற்குமில்லை. இப்படியிருக்க இவர்கள் எப்படித் தலைவர்கள் ஆகிறார்கள்? பணமும் ஆளும் பத்திரிகையும் தான் காரணம். அநேக யோக்கியர்களும் உண்மை தேசபக்தர்களும் அவர்களது இன்றியமையாத தொண்டும் தேசத்திற்கு உபயோகப் படாமல் என் மறைந்து கிடக்கிறது. பணமும் ஆளும் பத்திரிகையும் இல்லாததால்தான். ஆதலால் பாமர ஜனங்கள் மூட்டர்கள் இவ்விளம்பரங்களை நம்பி ஏமாறாமலும் அனுவசியமாய் அன்னியரை வைகிறார்கள் என்று நினைத்து நம்மீது அவசரப்பட்டு ஆத்திரப்படாமலும் உண்மையை அறியும்படி வேண்டுகிறோம்.

ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியாருக்கு உபசாரப் பத்திரம்.

தர்மபுரி வாலிப சங்கத்தின் இரண்டாவதாண்டு விழாவுக்கு அக்கிராசனம் வகிப்பதற்காக சென்னையிலிருந்து வரப்போகும் ஸ்ரீமான் எ. இராமசாமி முதலியாருக்கு தர்மபுரி யூனியன் போர்டார் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுப்பதாய் ஏகமனதாய் தீர்மானித்திருக்கிறார்கள்.

நாடார் சமூகம்.

——(❁)——

நமது தென்னாட்டில் உள்ள பல வகுப்புகளில் நாடார் என்கிற ஒரு பெரிய வகுப்பு கல்வியிலும் செல்வத்திலும் தேச பக்தியிலும் சிறந்து விளங்கி வருகிறது. ஆனால் அவ்வகுப்பாருக்குள்ளும் மற்ற வகுப்பார்களைப் போலவே ஒன்றுப்பட்ட அபிப்பிராயமில்லாமல் சுய நலமும் 'தான்' என்கிற அகம் பாவமும் அலக்ஷிய புத்தியும் மலிந்து கிடப்பதால் ஒற்றுமைக்குமார்க்கமின்றி பலவழிகளிலும் அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டு வருகிறதென்றே சொல்லலாம். மகாத்மா காந்தி அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும் முனைந்து நின்று உழைத்த காலத்தில் ஒதுங்கி இருந்துவிட்டு, அரசியல் துறைக்கு கண்ணியக்குறைவு ஏற்பட்டும், மகாத்மா விலகியும், சுய நலக்காரர் மலிந்து பிராமணாதிக்கத்திற்கு பிராமணர்கள் சூழ்ச்சி பரவியும் வரும் இக்காலத்தில் சில நாடார் வாலிபர்கள் அதன் இரகசியத்தை அறியாமலும் தற்போது அரசியல் துறையில் உள்ளவர்கள் எண்ணத்தையும் யோக்கியதையையும் அறியாமலும் போலிச்சுதந்தரத்தை உச்சரித்துக்கொண்டு தேசம் தேசம் என்கிற பெயரால் பிராமணர்கள் வயப்பட்டு தங்கள் சமூக முன்னேற்றத்தை அலக்ஷியம் செய்து தேச பக்தர்கள் என்கிற பெயர் வாங்கப்பார்க்கிறார்கள்.

சட்ட சபைத் தேர்தல்கள் வரப்போகிறது. சட்ட சபையின் மூலம் தேசத்திற்கு ஒரு நன்மையும் செய்து கொள்ள முடியாது என்பதைத் தெரிந்திருந்தும், சுயராஜ்யக் கக்ஷியிடத்திலும் அதன் பெற்றோர்களான பிராமணர்களிடத்திலும் பற்றுக்கொண்டு கானலுக்குழைக்கிறார்கள். இவர்களைக்கண்டு நாம் பரிதபிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனாலும் அச்சமூகத்தில் உள்ள பெரும்பான்மையோர் பலர் இச்சூழ்ச்சிகளை நன்றாய் அறிந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பதைக்காண ஒரு புறம் சந்தோஷமடைகிறோம்.

தற்காலம், நமது நாட்டில் ஏற்பட்ட சுயராஜ்யக் கக்ஷி என்கிற பிளேக் நோயானது பெரும்பாலும், பரிசுத்தமான வாலிபர்களையும், வயிற்றுச்சோற்று தேசபக்தர்களையும், உத்தியோகப் பேராசைகொண்ட அரசியல் வாதிகளையும் சுவாதீனப் படுத்திக்கொண்டு பிராமணரல்லாத சமூகத்தை வாட்டி வதைத்து வருகிறது. சில சுய நல அரசியல் வாதிகள் இந்நோய்க்கு ஆக்கம் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனாலும் நாடார் சமூகத்திற்கு சுயராஜ்யக் கக்ஷியால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை. சமூக விஷயங்களில் நாடார் சமூகம் முன்னேற வேண்டிய அளவு இன்னும் முன்னேறவில்லையென்றே சொல்வோம். அதற்காக வேண்டுமானாலும் நம்பிக்கையுள்ள சிலர் சட்டசபையை உபயோகப் படுத்திக் கொள்வதிலும் குற்றமில்லை; சத்தியாக்கிரகத்தை உபயோகப்படுத்திக் கொள்வதிலும் குற்றமில்லை; இரண்டுக்கும் பயந்தவர்கள் சர்க்காரை வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் எந்த விதத்திலும் சுயராஜ்யக்கக்ஷியை உபயோகித்துக் கொள்வது என்பது பொய்மான் வேட்டையாக முடிவதோடு தற்கொலை செய்து கொள்வதற்கே சமானமாகும். நாடார் சகோதரர்களே! இளைஞர்களே! வாலிபர்களே! ஏமாந்து விடாதீர்கள். இந்தத்தேர்தல் தீர்ந்த உடன் சுயராஜ்யக்கக்ஷியோ, அதன் பெற்றோர்களான பிராமணர்களோ உங்களைத் திரும்பிக்கூடப்பார்க்கமாட்டார்கள்! தெருவில் நடக்க விடமாட்டார்கள்! இது சத்தியம் சத்தியம்! உஷார்!! உஷார்!!!

நாடார் நண்பன்.

சர். தியாகராயர் திருநாள்.

உறையூர்.

உறையூர் தேவாங்க மகாஜன சங்கத்தின் ஆதரவால் 28-4-26-உ. புதன்கிழமை சர். தியாகராயர் திருநாள் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. அன்று காலை 10 மணிக்கு ஸ்ரீ சௌடாம்பிகைக்கு அபிஷேக அலங்காரம் செய்யப்பட்டு அன்று மாலை 6-மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. திரு டி. என். இராமசாமி செட்டியார் அவர்கள் தலைமையின்கீழ் திரு. தி. சா. நாகப்பன் அவர்களாலும், திரு. சுந்தரராஜுலு நாயுடு அவர்களாலும் சர். தியாகராயரின் ஜீவிய சரித்திரத்தை வெகு விரிவாகவும் தெளிவாகவும் பேசப்பட்டு, சபைத்தலைவர் முடிவுரை கூற திரு. கொ. வெ. மு. இலட்சுமணய்யா அவர்களால் வந்தனோபசாரம் கூற, சபையோர்களுக்கு கற்கண்டு வினியோகம் செய்ய சபை இரவு 9½-மணிக்கு முடிவு பெற்றது.—சபைமுன் சர். தியாகராயரின் திருஉருவப் படத்திற்கு அலங்காரம் செய்து வைக்கப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சூரம்பட்டி கொல்லத்துக்காரர் மகாநாடு.

சூரம்பட்டி கொல்லத்துக்காரர்கள் மகாநாடு 7-5-26 வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. ஸ்ரீமான் மு. ச. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களால் சிக்கனம், ஐக்கிய நாணயச் சங்கம் என்கிற விஷயமாயும் சேலம் பழனிச்சாமி பண்டாரம் அவர்களால் கட்டுப்பாடு, ஒழுக்கம் என்கிற விஷயமாயும் உபன்னியாசம் செய்யப்பட்டபின். கொல்லத்துக்காரர்கள் கூலிவிஷயம் நிர்ணயிக்கப்பட்டு தீர்மானங்கள்நிறைவேறிய பிறகு அக்கிராசனரால் முடிவுரையாக சங்கம், கதர் என்கிற விஷயத்தைப்பற்றி பேசியபின் கூட்டம் நிறைவேற்றது.

அப்பர் சுவாமிகள் திரு நக்ஷத்திரம்.

அப்பர் சுவாமிகளின் திரு நக்ஷத்திர விழா ஈரோட்டில் மண்டி ஸ்ரீமான் அ. கோவிந்த நாயக்கர் அவர்களால் பஜனைக் கோஷ்டியுடன் கூடிய நகர்வலத்துடன் வெகு சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

சென்னை மருத்துவகுல சங்கத்தின் பொதுக் கூட்டம்.

——(●)——

சென்னை நகர் காப்புக் கழகத்தினர் ஏழைகளுக்கு வைத்திய சகாயம் செய்யும் விஷயமாகக் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தைப் பற்றி 18-3-26-ம் நாள் மாலை 5-மணிக்குச் சென்னை தங்கசாலை வீதி 220. எண். மருத்துவ சங்க நிலயத்தில் திருவாளர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள் அவைத்தலைமையில் மருத்துவர்களும் அபிமானிகளும் ஒரு கூட்டம் கூடினார்கள். அதுகாலை வி. பி. இரத்தினசாமி பிள்ளை அவர்கள் பேசியதின் சுருக்கம் பின் வருமாறு:—

சென்னை நகர் காப்புக் கழகத்தார் 11-3-26-ம் நாள் கூடிய கூட்டத்தில் பொது ஜனங்களுக்கு வைத்திய உதவி போதாதெனவும், அதற்காகச் சென்னை 30 டிவிஷனிலும் 30 வைத்தியர்களை நியமிக்கவும், அதில் ஆயுர்வேத வைத்தியர்கள் பத்து, யூனானி வைத்தியர்கள் பத்து, ஆங்கில வைத்தியர்கள் பத்து ஆக முப்பது வைத்தியர்களை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதே தவிர சித்த வைத்தியமாகிய தமிழ் வைத்தியத்தைப்பற்றி பேசாமலிருப்பதற்கு மனம் வருந்துகின்றோம் எனவும், தமிழ் நாட்டில் பண்டைக்காலமுதல் இதுவரையில் தமிழர்களுக்குச் சொந்தமாயுள்ளதும், பொது ஜனங்களுக்கு மிக எளிதாக உதவிபுரிந்து வருவதுமாகிய தமிழ் சித்தவைத்தியத்தை அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டு ஆதரிக்க வேண்டுமென பல வருஷங்களாக பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள், சுவாமி சிவநான யோகிகள் முதலிய பெரியோர்கள் பல கூட்டங்கள் கூடி தமிழ்வைத்தியத்தை அரசாங்கத்தார் அறிந்து ஒப்புக்கொள்ளச் செய்ததின் பயனாக, முதல் மந்திரி கனம் பனகால் அரசர் அவர்கள் முயற்சியால் நடைபெற்று வரும் இந்திய வைத்திய பாடசாலையில் தமிழ் சித்த வகுப்பு ஒன்று நடைபெற்று வருகிறதெனவும், சித்த வைத்தியத்தை முறையாகப் படித்தவர்களும் சென்னையிலும் வெளியூர்களிலும் வேண்டியவர்கள் இருக்கின்றனர் எனவும் இதனை நகர்க்காப்புக் கழகத்தினருக்கு அறிவித்துக்கொள்ள வேண்டுமெனவும், பேசினார்கள். இதனை ஆதரித்து திருவாளர். எம். சரவணப் பிள்ளை அவர்கள் பேசினார். பின்னர் அவைத்தலைவர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தமிழ் வைத்தியம் மிக உயர்ந்ததெனவும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சிறந்த நிலையில் இருந்ததெனவும் தமிழ் வைத்தியமே இலங்கையிலும், பர்மாவிலும், சிங்கப்பூர், பினாங்கு, கோலாலம்பூர் முதலிய மலேயா நாடுகளிலும் பரவியுள்ளதெனவும் மேற்கே மடகாஸ்கர், தென்னாப்பிரிக்கா வரையிலும் பர்மாவிலும் பரவியுள்ளதெனவும், இந்தியாவின் வடக்கே இமயமலை முதல் பரந்துள்ளதெனவும், இதனை காலஞ்சென்ற பண்டிட் டி. கோபாலாச்சாரியார் அவர்கள், ஐகோர்ட்டு ஜட்ஜியாயிருந்த டாக்டர். சர். எஸ். சுப்பிரமணிய அய்யர் முதலிய பல பெரியோர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றார்களெனவும் இத்தகைய தெய்விக வைத்தியமாகிய சித்த வைத்தியத்தை நடுவில் ஆதரித்து வளர்ப்பாரின்றி ஒளிமழுங்கிவிட்டதெனவும், தற்காலம்நமது அரசாங்கத்தார் நமது நாட்டுவைத்தியத்தை ஆதரிக்க முன் வந்தும் பொது ஜனங்களும் செல்வர்களும் சித்த வைத்தியத்தில் அபிமானம் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இதை நமது நகர்க் காப்புக் கழகத்தினர் அறியும்படி நமது நாட்டு வைத்தியர்களும் பொது மக்களும் ஒற்றுமையோடு கேட்டுக் கொள்ளுதல் வேண்டுமெனவும், பேசிய பின்னர் அரசாங்கத்தார் நடாத்திவருகிற இந்தியன் மெடிகல் ஸ்கூலில் உடற்கூறு உடற்றொழில் முதலியவைகளை ஆங்கிலவாயிலாக போதிக்கப்படுகிறபடியால் ஆங்கிலம் படியாத தமிழ் மாணவர்கள் பலர் அப்பாடசாலையில் சேர்ந்து தமிழ் மருத்துவம் படிப்பதற்கு இயலாமல் இருக்கின்றனரெனவும் இதுவரையில் தமிழ் உரை நடையில் உடற்கூறு, உடற்றொழிலைப்பற்றிய நூல்கள் பல வெளிவந்திருக்கிறவைகளையே பாடமாக வைத்துக்கொள்ளலாம் எனவும், அவை போதாவிடின் புதிதாக வேண்டியவைகளையும் சேர்த்துச் சொல்லிக் கொடுக்கலாமெனவும், தமிழ் வைத்திய நூல்களிலுள்ள முக்கியமான பாடங்களைத் திரட்டி பாடமாகக் கொடுக்கலாம் எனவும், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் தமிழ்வைத்திய பாடசாலையில் தேக தத்துவங்கள் சுகாதார தேப் விவா முதலியவைகளைத் தமிழில் சொல்லிக்கொடுக்கப் பின்வாங்குவது நலமாகக் காணப்படவில்லை எனவும் அநேக உதாரணங்களுடன் மிகத் தெளிவாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அரசாங்கத்தாருக்கும் சென்னை நகர்க் காப்புக் கழகத்தாருக்கும் இத்தீர்மானத்தை அனுப்பவேண்டுமென ஒரே மனதாய் தீர்மானம் நிறைவேறி இரவு 8 மணிக்கு மேல் இனிதே கூட்டங் கலைந்தது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சித்தவைத்தியத் தலைவர்களுக்கோர் அறிவிப்பு.

——:O:——

19-3-26-ல்வெளிவந்த"ஸ்வராஜ்யா"பத்திரிகை 3-வது பக்கத்தில் மதராஸ் சித்த வைத்திய சங்கத்தில்கூடிய சித்தவைத்தியர்களால் தீர்மானித்த தீர்மானத்தை மதராஸ் கார்ப்பரேஷன் அங்கத்தவர்களுக்கும், (ஹெல்த்து ஆபீசர்) ஆரோக்கிய கமிட்டியாரவர்களுக்கும் ஷை கூட்டத்தாருள் நிறைவேற்றிய தீர்மானத்தின் முடிவை தெரியப்படுத்த சபைத்தலைவரவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கும் விபரம் வெளியிடாதது சித்த வைத்தியர்களும் சித்தவைத்திய அபிமானிகளும் வருந்தத்தக்கதாகும். நூதனமாகக் கிளம்பியவர்களும், தங்கள் புராதீன குலத்தொழிலை அறவே விடுத்து தற்காலம் கைக்கொண்டொழுகும் தொழில் முன்னேற்றமடைய விடாமுயற்சி செய்து வருவதைக் கண்டும், நமது சித்தவைத்திய நண்பர்கள் நமக்கிருக்கும் பாத்தியத்தையும் நம் நாட்டிற்கு நம்வர்க்கத்தவரால் ஒவ்வொரு ஜில்லாவிலும் சிற்றூர்களிலும் செய்துவரும் மருத்துவ உதவிகளையும் விளக்கிக்காட்டி நம்வகுப்பாருக்கும் எத்துறையிலும் பங்கு கிடைக்க வேண்டுமென்பதை எடுத்துரைத்து வாதாடுதலே நம் சித்த வைத்தியம் முற்போக்கடையும் வழியாகும்.

நம் நாட்டின் மக்களுக்கு நலஞ்செய்யக் கருதிய ஸ்ரீமான்-சிங்காரவேலு செட்டியாரவர்களும் ஏனைய மெம்பர்களும் ஆமோதித்து ஆதரித்தது அனைவராலும் போற்றத்தக்க தொன்றாகும்.

ஆனால் நம் நாட்டு புராதன வைத்தியமாகிய சித்த வைத்தியத்திற்கு கவர்ன்மெண்டார் ஆதரவளித்து ஆதரித்து வருவதை, மதராஸ் கார்பரேஷன் மெம்பர்கள் நன்குணர்ந்திருந்தும் சமயம் வாய்த்தபோது சித்த வைத்தியத்திற்கு ஆதரவளிக்குமுறையையும் பாராட்டாது விடுத்தது சித்தவைத்தியர்களுக்கு யேமாற்றத்தையும் ஏக்கத்தையும் மிக்க விசனத்தையும் உண்டாக்கக் கூடியதென்பதை சிந்தித்து ஆதரவளிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நம் சித்த வைத்திய மாபெரும் தலைவர்கள் சித்த வைத்தியத்தின் முன்னேற்றத்திற்கான பல துறைகளையும் செய்து முடித்தனர் போல ஓய்வெடுத்துறங்குவது அடாது! அடாது!!

"முயற்சியுடையார்--இகழ்ச்சியடையார்": என்பதற்கிலக்காக நாம் விடாமுயற்சியாளராகவிருந்து நம்ம வர்க்கத்தவர்களை முன்னேற்றத்திற்குக்கொண்டுவரவும், நம் சித்த வைத்திய மருந்துகளின்-வீரத்தையும் அம்மருந்துகளால் பிறவைத்தியத்தில் தீராதென கைவிடப்பட்ட இருமல் ரோகம், சொற்பன கலித ரோகம், நபுஞ்சகத்துவம் முதலிய பல மகாரோகங்களையும் நிவர்த்தித்து வருவதென்பதை ஆங்கில பண்டிதர்களில் அநேகருமறிந்திருக்க சித்த வைத்திய கூட்டத்தார் துயில் விட்டெழாதிருப்பது முறையா? தங்களினத்திற்கிருக்கும் குறைபாடுகளை சீர் திருத்தாதிருப்பது சரியா?

சித்த வைத்தியத் தலைவர்கள் தன்னலங் கருதுவதை அறவே விடுத்து பொது நலங் கருதி முன் வந்து சென்னையிலும் மற்றும் தமிழ் நாட்டு ஜில்லாக்களிலும் வெளியூர்களிலும் இருக்கும் சித்த வைத்தியர்களை, தங்கள் குழுவுடன் சேர்த்து நீண்ட அனுபவமுள்ள தற்கால சித்த வைத்தியர்களுக்கு ஓர் துறை யேற்படுத்தி நடத்த ஓர் வைத்திய போர்டும் அதன்செலவிற்காக சந்தா தொகையும் யேற்படுத்தி நடத்த முன்வர எல்லாம் வல்ல சித்தன் அருள் புரிவானாக.

வைத்தியபதி, G. சிகாமணி பண்டிதர்,
இன்சார்ஜ் சித்த வைத்தியர்,
முனிசிபல் சித்த வைத்திய டிஸ்பென்சரி,
பாப்பநாயக்கன்பாளையம், கோவை.

"வினோதினி."

சென்னை சர்மா சகோதரர்களால் வெளியிடப்பெற்றுவந்த "வினோதினி" என்னும் விகடப்பத்திரிகை சிலநாட்களாக நிறுத்திவிடப்பட்டது. திரும்பவும் அதை மாதப் பத்திரிகையாக வெளியிடப்போவதாகவும், கொஞ்சநாள் சென்றபின் வாரந்தாமாக மாற்றப்பெறுமென்றும் அதன் பிரசுர கர்த்தா நமக்கு அறிவிக்கிறார்.

பெரிய தானம் எது?

உலகத்தில் மனிதனாய்ப் பிறந்தால் தானத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். தானமென்றால் என்ன? அன்னதானம் சொர்ணதானம் கன்னிகாதானமா? அல்ல. மற்றது எது? உலகத்தில் தைலதாரைப் போன்று ஜனனமெடுக்கும் மனிதன் முதல் முதல் அன்னதானம் சொர்ணதானம் கன்னிகாதானம் இன்னும் எவ்வளவோ அளவிடா தானங்களைச் செய்கிறதைவிட மனிதனுக்கு உயர்ந்த தானம் நிதானந்தான். இந்த தானத்தை நம்முள் இருக்கும் அஞ்ஞானத்தை நீக்கி மனதைத் துலக்கி நிதானம் என்கிற தானத்தைக் கைக்கொண்டால் நாம் என்றைக்கும் தீயவழியில் புகாமல் சன்மார்க்க வழியைக் கைக்கொண்டு நாம் நீடூழி சுகமாய் வாழ்ந்து, பகவானுடைய அருளுக்கு பாத்திரனாக அமையலாம். இதற்கோர் உதாரணம் சாந்தி வருமாறு:—

மனோசாந்தி ஞானத்தின் அழகிய ஆபரணங்களில் ஒன்று. அது, தன்னை (உடம்பையும் நினைப்பையும்) அடக்கி யாள்வதற்காகப் பொறுமையோடு நீண்டகாலம் செய்த முயற்சியின் பலன். அதன் உடைமை, முதிர்ந்த அநுபவத்தையும் நினைப்பின் செயல்களையும் நியதிகளையும் நன்குணர்ந்த அறிவையும் உண்டாயிருப்பதைக் காட்டும் ஓர் குறி. மனிதன் தன்னை நினைப்பிலிருந்து பரிணமித்த ஒரு பிராணியென்று எவ்வளவாக அறிகிறானோ அவ்வளவாக அமைதியை அடைகிறான். ஏனெனில் நினைப்பின் காரியமாகவே பிறரும் உண்டாயிருக்கின்றனர். ரென்று அறிவதற்கு அவ்வறிவு ஏதுவாகின்றது. அவன் சரியாக அறியப்பழகிக் காரண காரிய நியதியைக் கவனித்துக் காரியாகாரியங்களின் உட் சம்பந்தங்களை மேலும் மேலும் தெளிவாகப் பார்ப்பதனால், வீணில் அலப்புவதும் கோபிப்பதும் கவலைப்படுவதும், துக்கிப்பதும், இல்லாமல் நிலையாய், நிதானமாய்ச் சாந்தமாய் இருக்கிறான்.

அமைதியுள்ள மனிதன், தன்னை அடக்கியாளக் கற்றுக்கொண்டபடியால் மற்றவர்களோடு இணங்கி நடக்கும் விதத்தை அறிகிறான்: அவர்களும் தங்கள் பட்டில் அவனது ஞானவிசேஷத்தை மதித்து, அவனிடமிருந்து நல்ல கற்கலாமென்றும், அவன்மீது நம்பிக்கை வைக்கலாமென்றும் உணர்கிறார்கள். ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அமைதியுள்ளவனாகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய காரிய சித்தியும் செல்வாக்கும் நன்மை செய்யும் சக்தியும் அதிகரிக்கின்றன. ஒரு சாதாரண வியாபாரியும், அடக்கத்தையும் அமைதியையும் விர்த்தி செய்து வந்தால் அவனுடைய வியாபாரம் விர்த்தியாவதைக் காண்பான்; ஏனெனில், ஜனங்கள் அமைதியான ஒழுக்கமுள்ளவனிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யவே ஜனங்கள் பிரியப்படுவது சகஜம்.

திடமும் அமைதியுமுள்ளவனிடத்தில் எல்லோரும் எப்பொழுதும் நேசமும் மதிப்பும் பாராட்டுவார்கள். அவன் பாலைவனத்தில் நிழல்தரும் மரத்தைத்தவர் அமைதியான வாழ்க்கையும் நிதானமான வாழ்க்கையும் விரும்பாதவர் எவர்? இந்நற்குணங்கள் வாய்ந்தவர்களுக்கு மழை பெய்தாலும், வெயில் காய்ந்தாலும், வேறு எவ்வித மாறுதல் உண்டானாலும் ஒன்றுமில்லை; ஏனெனில், அவர்களிடத்தில் இனிமையும் நிதானமும் சாந்தமும் எக்காலத்துமுண்டு. நாம் நிதானமென்று சொல்லும் ஒழுக்கமானது மனோவிர்த்தியின் முடிவான பாடமாகும். வாழ்க்கையின் மலரும், ஆன்மாவின் கனியும் அதுவே. அது ஞானத்தைப்போல அரியது; தங்கத்திலும்-ஆம், பத்தரை மாற்றுத் தங்கத்திலும்-அதிகமாக விரும்பத் தக்கது. உலைமைக் கடலில் எதற்கும் சலிக்காமல் வாழும் நிதான வாழ்க்கையோடு வெறும் தனார்ச்சனத்தை ஒப்பிட்டுப்பார்த்தால், தனார்ச்சனம் எவ்வளவு அற்பமாய்த் தோற்றுகின்றது?

"நாம் தினந்தோறும் காண்கின்ற மனிதரில் எத்தனைபேர் தமது அருமையான உயிர்களை வருத்துகின்றனர்? எத்தனைபேர் கடுகடுத்த முகமும், வெடு வெடுத்த பேச்சும் கொண்டிருக்கின்றனர்? எத்தனைபேர் நட்பைவிடுத்து பகையை ஆக்குகின்றனர்? எத்தனைபேர் நிதானமான ஒழுக்கத்தை விடுத்து நீங்காத துன்பத்தை அடைகின்றனர்? தம்மை அடக்கும் சக்தி இல்லாமல் தமது வாழ்நாட்களை வீணாக்கி தமது இன்பங்களைக் கெடுத்துக்கொள்வோர் உலகில் பெரும்பாலரல்லரோ? சான்றாண்மைக்குரிய சிறப்பியல்பான நிதானத்தோடு வாழ்பவர் மிகச் சிலரல்லரோ?"

ஆம்! மனித சமூகம் அடக்கியாளாத காமக்குரோதங்களால் அலைப்புண்கிறது. அடங்காத துக்கத்தால் குழம்புகிறது, விடா கவலையாலும் ஐயத்தாலும் சிதறுகின்றது. தனது நினைப்புகளை அடக்கிப் பரிசுத்தப்படுத்திய அறிவாளன் ஆன்மாவை அலைக்கழிக்கும் புயல்களை அடிமைப்படுத்துகிறான்.

புயல்காற்றில் அடிபட்டலைகின்ற ஆன்மாக்களே! நீங்கள் எவ்விடத்தில் இருப்பினும், நீங்கள் எத்தகைய நிலைமையில் வாழினும், இதனைத் தெரிந்துகொள்ளுங்கள். வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் பாக்கியமாகிய தீவுகள் ரமணியமாக விளங்குகின்றன. உங்கள் மனோபாவனையான அழகிய கரைகள் உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. நினைப்பாகிய சுக்கானை உங்கள் அறிவாகிய கைகளால் தளராமல் பிடித்திருங்கள். உங்கள் ஜீவனாகிய ஓடத்தில் அதனை நடத்தி ஆன்மாவாகிய மாலுமி சயனித்திருக்கிறான்; அறிதுயிலாக அமர்ந்திருக்கின்ற அவனை எழுப்புங்கள். தன்னடக்கமே வல்லமை; சரியான நினைப்பே ஆண்மை; அமைதியே ஆற்றல்; உங்கள் இருதயத்தைப் பார்த்து, "கவலைகொள்ளாதே," சாந்தியாயிரு என்று சொல்லுங்கள். சுபம்! சுபம்!!

எஸ். பி. கிருஷ்ணசாமி,
ஈரோடு.

தடை வேலையா? ஒத்துழைப்பா?

ஏகாதிபத்திய பாராளுமன்ற அசோசியேஷன் காரியதரிசியாகிய சர். ஹோவர்டிக் வில்லை என்பாருக்கு விருந்து நடத்திய போது சுயராஜ்யகட்சியாருக்கும் தனிப்பட்ட அபேக்ஷைக் கட்சியாருக்கும் என்ன வேறுபாடு என்று கேட்டதற்கு, "சுயராஜ்யக்கட்சியார் தடைவேலை, தடைவேலையென்று கூடிக்கூடி சொல்லிக்கொண்டு, அதிகாரவர்க்கத்துடன் ஒத்துழைத்தும், தனிப்பட்ட கட்சியார் ஒத்துழைப்பு ஒத்துழைப்பு என்று சொல்லிக்கொண்டு, கூடிக்கூடி அதிகாரவர்க்கத்துடன் தடை வேலை செய்து வந்ததுமே வேறுபாடென்று" சுயராஜியக் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியார் சொன்னதாக திரு. எ. இராமசாமி முதலியார் திருச்சி பிரசங்கத்தில் கூறினார்.

திருச்சி தமிழ் சித்த வைத்திய தருமசாலை.

இத் தரும சித்த வைத்தியசாலைக்கு நமது பிரதிநிதிசென்று பார்வையிட்டுவந்தார். ஏழை மக்கள் அதிகமாக வசிக்குமிடத்தின் பக்கத்தில் இவ் வைத்தியசாலை அமைந்திருக்கிறது. ஆங்கில வைத்திய முறைப்படி மருந்து கொடுக்கும் தரும வைத்தியசாலை அங்கு சமீபத்தில் இல்லை. இத் தரும சித்த வைத்தியசாலை யிருக்குமிடத்திலிருந்து சுமார் 1 மைல் தூரத்தில் முனிசிபல் ஆஸ்பத்திரி இருக்கிறதே யொழிய சமீபத்தில் வேறொன்றுமில்லை. திரிசிரபுர நகரை வகுத்து ஓடும் உய்யக்கொண்டான் வாய்க்காலுக்கு தென்புறமாயுள்ள பீமநாயக்கன்பாளையத்திலும் மேலப்புதூரிலும் வசிக்கும் ஜனங்களில் ஒரு பகுதியாரும், பாலக்கரையைச்சேர்ந்த இருதயபுரம், இடத்தெரு, மஞ்சனக்காரத் தெரு காஜாப்பேட்டை கிழப்புதூர் முதலிய தெருக்களில் வசிக்கும் ஜனங்களுக்கெல்லாம் இவ் வைத்தியசாலை பேருதவி யளித்துவருகிற தென்றறிய மகிழ்வெய்துகிறோம். ஏழை மக்களுக்கு எளிதிலும் அலைச்சலில்லாமலும், விரைவில் குணமாகத்தக்க விதமான ஔடதம் கிடைக்கத்தக்க பரோபகார நோக்கத்துடன் பாடுபட்டு இவ்வைத்தியசாலையை அமைத்த திருச்சி தமிழ் சித்தவைத்திய சங்க அமைச்சர் திரு ஜி. ஹூர்துசாமி பிள்ளை அவர்களை வாழ்த்துகிறோம்.

இவ்வைத்தியசாலை சுகாதார நோக்கத்திற்குத் தக்கபடி நல்ல காற்று வரும்படியான பெரிய கட்டடத்தில் அமைந்திருக்கிறது. தினந்தோறும் வந்து போகும் நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்கட்கு அன்போடும் ஆதரவோடும் கவனித்து வியாதியின் கூறறிந்து மருந்து கொடுக்கப் படுகிறது. நீண்ட காலமாய் நோய் வாய்ப்பட்டிருந்த பலர் இவ்வைத்தியசாலையால் குணமடைந்திருப்பதாக அதன் சமீபத்தில் வசிப்பவர்களால் கூறப்பட்டதாக நமது பிரதிநிதி கூறுகின்றார்.

கட்டட வாடகை, மருந்துச் செலவு, துணை வைத்தியர் சம்பளம் முதலியவற்றின் செலவுக்காகப் பணமுடையால் இதன் கர்த்தா மிகுந்த கஷ்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனினும் விடாமுயற்சியுடன் நடத்தி வரும் திரு. ஜி. எஸ். சாமி அவர்களை நாம் மெச்சுகிறோம்.

திருவாரூரில் இத்தகைய தமிழ் சித்த வைத்தியசாலை யொன்று முனிசிபல் சபையாரின் ஆதரவால் நடைபெற்று வருகின்றது. அதே போல் இவ்வைத்திய சாலையின் செலவையும் திரிசிரபுர முனிசிபல் சபையார் ஏற்றுக் கொண்டால் ஏழை மக்களுக்குப் பெரிதும் நலம் பயக்குமென்று எண்ணுகிறோம்.

சென்னை சட்ட சபைக்கு
வட ஆற்காடு ஜில்லா அபேக்ஷகர்.

ஒத்துழையாமை இயக்கம் ஒழிந்து போகவே, சர்க்கார் தயவை அண்ணூந்து நிற்கும் பட்டதாரிகளும், ஏழைகளை ஏமாற்றும் முதலாளிகளும், நாட்டைப் பாழ்படுத்தும் வக்கீல் கூட்டமும் நிறைந்துள்ள சுயராஜ்ய கக்ஷியின் நிலைமை தடுமாற்றத்திலிருக்கிறது. வட ஆற்காடு ஜில்லாவுக்கு மறுபடியும் ஸ்ரீமான்கள் ஆதிநாராயண செட்டியார் வெங்கட்டரங்கம் நாயுடுவும், இதுவரையில் ராஜீய உலகத்தில் கேள்விப்படாத வக்கீல் ஸ்ரீமான் மாணிக்கவேலு நாயக்கரும் சுயராஜ்பக்கக்ஷி அபேக்ஷகராக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மூன்று கனவான்களைத் தவிர சுமார் 63 ஆயிரம் ஓட்டர்கள் அடங்கியுள்ள இந்தஜில்லாவில்,(ஜில்லாவுக்குபுறம்பேயுள்ள இவர்களைத்தவிர) வேறு எவரும் சுயராஜ்யக் கக்ஷித் தலைவருக்கு அகப்படவில்லையோ? சுயராஜ்யக் கக்ஷி தலைவர்களுக்கு காங்கிரஸினிடம் பக்தியிருந்தால், இதுவரையில் காங்கிரஸ் கக்ஷியில் சேராத ஸ்ரீமான் மாணிக்கவேலு நாயக்கரை இவர்கள் நிறுத்திவைப்பார்களா? தேசத்துக்காக அரும்பாடுபட்டு சிறை சென்றவர்களும் தியாகம் செய்தவர்களும் சுமார் 6 வருஷ காலமாய் கதர் அணிந்து அதிகாரிகளை எதிர்த்து நின்று இதர கக்ஷிகளைத் தலையெடுக்காமல் தீவிர காங்கிரஸ் பிரசாரம் செய்த தேச பக்தர்கள் இந்த ஜில்லாவில் இல்லையோ? ஆனால் அவர்கள் சுயராஜ்யக்கக்ஷி தலைவர் கோரும் 1,000 ரூபாய் கொடுக்க சக்தியற்றவர்களாய் இருக்கலாம். அதைத்தவிர வேறு விஷயத்தில் இம்மூன்று அபேக்ஷகர்களுக்கு எந்த விதத்திலும் குறையாத பல பிராமணரல்லாதார்கள் இருக்கிறார்கள். பணத்தையே பெரிதாக எண்ணி, ஏழைகளை அலக்ஷியம் செய்யும் சுயராஜ்யக் கக்ஷியார் அப்படிப்பட்டவர்களை நியமிக்க முன் வருவார்களா? ஒருக்காலும் வரமாட்டார்கள்.

இப்போது நியமிக்கப் பட்டிருக்கும் போலி சுயராஜ்யக் கக்ஷி அபேக்ஷகர்கள் ஜஸ்டிஸ் கக்ஷி அபேக்ஷகர்களைவிட எந்த விதத்தில் உயர்ந்தவர்கள்? சுயராஜ்யக் கக்ஷி அபேக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கும் இம்மும்மூர்த்திகள் தேசத்துக்காக என்ன தியாகம் செய்தார்கள்? எத்தனை முறை தேசத்துக்காக சிறை சென்று வந்தார்கள்? எந்த விதத்தில் இவர்கள் உண்மையாய் உழைத்தார்கள்? என்று கேட்கிறேன். பிராமணருக்கு பின்பாட்டுப் பாடுவதைத் தவிர இம்மும்மூர்த்திகள் வேறு என்ன செய்யப் போகிறார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த பிராமணரல்லாதார்களைக் கண்டபடி தூற்றவும், அக்கக்ஷியை ஒழிக்கவுமே கங்கணம் கட்டித்திரியும் இச் சுயராஜ்யக் கக்ஷி பிராமணர்கள் செய்யும் சதியாலோசனைகளையும் திட்டல்களையும் கண்டு தமிழ்நாட்டிலுள்ள கண்ணியமும் மதிப்புமுள்ளவர்கள் இன்னும் ஏமாறுவார்களென்று நினைப்பதற்கில்லை. ஜஸ்டிஸ் கட்சியாருக்கும், சுயராஜ்பக் கக்ஷியாருக்கும் இப்பொழுது எந்த விதத்தில் வித்தியாசமிருக்கிறது? கதரை சுயராஜ்யக் கட்சியார் சமயோசிதமாய் விரும்புகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியில் பலர் கதர் அணிந்துவருகிறார்கள். தீண்டாமை ஒழிப்பதில் சுயராஜ்யக்கட்சி பிராமணர்களைவிட ஜஸ்டிஸ் கட்சியார் எந்த விதத்தில் குறைந்தவர்கள். ஜஸ்டிஸ் கட்சியார் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை விரும்புகிறார்கள். சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் அதை வெறுக்கிறார்கள். ஏன் வெறுக்கிறார்கள்? தங்கள் வர்க்கத்தாருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தால் ஹானி வருமென்றுதான்; மற்றபடி. சுயராஜ்யக் கட்சியார் புரட்டிவிட்டது வேறொன்றுமில்லை.

வட ஆற்காடு ஜில்லாவில் கண்ணியமும் சுயமதிப்பும் யோக்கியதையும் உலக அறிவும் செல்வாக்கும் படைத்த பிராமணரல்லாதார்கள் எத்தனையோ பெயர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் புறக்கணித்து காங்கிரஸ் அபிமானமில்லாத ஒருவரையும் பழைய பெருச்சாளிகள் இருவரையும் (அதுவும் சேலம் ஜில்லா, சென்னை ஜில்லாவைச்சேர்ந்தவர்கள்) வட ஆற்காடு ஜில்லாவுக்கு அபேக்ஷகராக நிறுத்திவைத்தது பெரும் மோசமாகும். வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள பிரபல காங்கிரஸ் பிரசாரகர் ஸ்ரீமான் அண்ணாமலைபிள்ளை, போன்றவர்கள் சுயராஜ்யக்கட்சி தலைவரின் வாலைபிடித்துக்கொண்டு தொங்குவது மிகவும் கேவலமானதாகும். இம்மாதம் 15-ம் தேதி வேலூரில் நடைபெற்ற (தலைவர்கள் என்று சொல்லப்படுவோரின் கூட்டத்தில்) காங்கிரஸ் பிராமணரல்லாதாரை சுயராஜ்ய கட்சி பிராமண தலைவர் லக்ஷியமே செய்யாமல் சீமைத் துணி அணிந்து வரும் வக்கீல் கூட்டத்தாரை சுயராஜ்ய கட்சி தலைவர் புகழ்ந்திருப்பதே இதற்குப் போதிய சான்றாகும். அன்று நடந்த கூட்டத்தில் ஆரணி ஸ்ரீமான் இராமஸ்வாமி முதலியார் வெளி ஜில்லாக் காரரை, அதிலும ஸ்ரீமான் மாணிக்கவேலு நாயக்கரை அபேக்ஷகராக நிறுத்திவைக்கக் கூடாதென்று எவ்வளவோ மன்றாடியும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாய்விட்டது. அன்று . கோட்டை மைதானத்தில் நடந்த ஓர் கூட்டத்தில் தலைமை வகிக்க வட ஆற்காடு ஜில்லா வாசி ஒருவர்கூட அகப்படவில்லைபோலும். அக்கூட்டத்தில் சித்தூர் பிராமணர் ஸ்ரீமான் துரைசாமி அய்யங்கார் M. L. C. தலைமை வகித்ததே, பல தீவிர காங்கிரஸ் வாதிகளுக்கு பெரும் வருத்தத்தை விளைவித்தது. வட ஆற்காடு ஜில்லாவின் தலையெழுத்து தான் என்னே!

ஈசன்.

சித்தர் திருநாள்.
3-வது ஆண்டின் கொண்டாட்டம்.

—:o:—

நிகழும் அட்சயவாண்டு சித்திரைத் திங்கள் 15-ம் நாள் செவ்வாய்க்கிழமை (27-4-26) காலை 11-மணிக்கு அண்டத்தினது இயல்பும் அருள் வடிவாகிய குமரன், குமரிவடிவும், நித்திய வடிவாகிய நவநாத சித்தர் திருவுருவங்கள் விளங்கிய பாடத்திற்கு யோகானந்த ஆச்சிரமத்தில் (சித்த வைத்திய சங்கம், சென்னை.) அலங்கார ஆராதனை முதலிய உபசாரங்கள் தமிழ்மறை ஒலிக்க நடை பெற்றன. எவ்வித பேதமும் கருதாது பாடசாலைச்சிறார்கள் சுமார் 300 பேருக்கு, இன்னமுது அளிக்கப்பட்டது. மாலை 6 மணிக்குச் சபை கூடியது. திருவாளர் க. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ., எம். எல். அவர்கள் தலைமை வகித்தார். நாட்டு வைத்திய பாடசாலையில் தமிழ் சித்த வைத்திய உபாத்தியாயராக விருக்கும் திரு. முருகேச முதலியார் அவர்களாலும் கும்பகோணம் திரு. கன்னைய நாயுடு அவர்களாலும், சித்த வைத்திய சங்கத்தின் அமைச்சர் மறைத்திருவன் சண்முகானந்த சாமிகளாலும் சித்தர் சம்பந்தமாக சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றதும் தலைவருக்கும் பேசியோர்களுக்கு மலர் மாலை அணிந்து சித்தர் திருவுருவங்களுக்கு ஆராதனை செய்யப்பெற்று கூட்டம் 8½ மணிக்கு நிறைவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஈரோடு கொங்களம்மன்
பெண் பாடசாலை
பரிசளிப்பு விழா.

இந்நகர் நகரபரிபாலன சபையார் ஆதரவில் நடைபெறும் பெண் பாடசாலைகளில் கவர்ன்மெண்டு அதிகாரிகளால் சிறந்த ரிமார்க்கு பெற்றுள்ள கொங்களம்மன்பெண் பாடசாலையின் பரிசளிப்புக் கொண்டாட்டம் இம்மாதம் 26-ந் தேதியன்று ஈரோடு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் எஸ். என். வெங்கிட்டரமணய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமை உபாத்தினியின் அழைப்புக்கிணங்க பல கனவான்களும், சீமாட்டிகளும் விஜயம் செய்திருந்தனர். மாணவிகள் "ஞானசுந்தரி" என்னும் அருமையான நாடகத்தை இனிமையானபாடல்களால் வெகு நேர்த்தியாய் நடித்தார்கள். இதில் ஞானசுந்தரியாகவும், தருமாகவும் நடித்த சிறுமிகள் பாப்பம்மாள், ஏ. பொன்னம்மாள் இவர்களின் செய்கை மிகவும் பாராட்டத்தக்கதாயிருந்தது. மற்ற பிள்ளைகளும் நன்றாகவே நடித்தனர். தலைமை உபாத்தினி ஸ்ரீமதி. ருக்மணி யம்மாள் ஆண்டு ரிபோர்ட்டு வாசித்தார். இதைக் கவனிக்கும்போது இப்பாடசாலையின் அபிவிர்த்தி நிதர்சனமாகத் தெரிந்தது. பின்னர் சிறுமிகள் கும்மி அடித்தனர். அதுவும் புதுமாதிரியாகவே இருந்தது. சபையோர் இவைகளைக்கண்டு பிரமானந்தமடைந்தனர். எப்போதும் கரகோஷமாகவே இருந்தது. முடிவில் அவைத்தலைவர்கள், பரிசுகளை வழங்கியபின், முடிவுரைப் பிரசங்கம் செய்தார். இதில் சுசீலா, சீதை, மகாத்மாகாந்தியின் தாயார் முதலிய பெண்மணிகளைக் குறிப்பிட்டு, சிறுமிகள் இவ்வாறேபெயர் பெற்றவர்களாக விளங்க வேண்டுமெனக் குறிப்பிட்டனர். மேலும், இப்பாடசாலையின் பெருமையையும். மாணவிகளின் திறமையையும், உபாத்திமார்களின் அரியபெரிய முயற்சியையும் பாராட்டிப் பேசினார். இந்த பாடசாலை இவ்வளவு நற்பெயரடைந்ததற்குக்காரணம், இப்பாடசாலை உபாத்தியாயினிகளாகிய ஸ்ரீமதிகள் ருக்குமணி அம்மாள், T. B. L. சொர்ணம்மாள், சாராபிலிப்ஸ் அம்மாள் முதலியோருடைய ஒத்துழைப்பும், கல்விச்சிறப்பும் என்றே கூறலாம்.

ஓர் நிருபர்.

மதிமோச விளக்கம்.

உலகானுபவம் பெறவேண்டுமானால், உடனே "மதிமோச விளக்கம்" என்னும் புஸ்தகத்தை வாசியுங்கள். இதில் உலகத்தில் நடக்கும், பல வகை மோசங்கள் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் படிப்பவர்கள் ஷை மோசக்காரர்களிடம் ஏமாறாமல் தப்பித்கொள்வார்கள் என்பது திண்ணம். இது படிக்கப் படிக்க மிகவும் இன்பமா இருப்பதன்றி விடா ஆசையையும் விளைவிக்கும். நமது பெண்கள் இப்புத்தகத்தை படித்தால் குருட்டு நம்பிக்கை என்பது இந்நாட்டை விட்டு ஓடிப்போகும். 230 பக்கங்கள் 120 மோசங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் வேறு.

விலாசம்:—

ஜி. செல்வபதி செட்டி அண்டு கோ,
பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ்.

பிரமேக குல சம்ஹாரி.

பலவித காந்திக் கடுப்புகள், 21 வித மேகரோகம், 7-வித வெள்ளைரோகம், ரணம் அரையாப்பு, சூலை, வாத முதலிய கிராக கொடிய ரோகங்களையும் ஒரே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென் இந்தியா)

"ஐஸ்வரிய இரகசியம்"

என்னும் புத்தகம் முற்றிலும் இனாம்!

ஐஸ்வரியம் அடையும் இரகசியத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. உடனே எழுதுங்கள்.—மறந்துவிடவேண்டாம்.

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
25, தெப்பக்குளம், திருச்சி.

கவனித்து வாசியுங்கள்.

டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்மனியின் சோப் ஆராத ரணங்கள், புண், சொறி, சிரங்கு, முகப்பருவு, தேம்பல் எச்சிற்தேம்பல், படை, செம்படை, மேகத்தினால் உண்டாகும் சகலவித சர்ம வியாதிகள், நமைச்சல் இன்னும் அநேகவித சர்ம வியாதிகளை ஆச்சரியமாய் குணப்படுத்தும் முகப்பருவுகளை வெகுசீக்கிரத்தில் போக்கடிக்கும் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் இருக்கின்றன.

3-சோப் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ. 2—8—0. தபால், பாக்கிங் கூலி வேறு. வேண்டுவோர்,

பி. எஸ். பொம்மையா, அண்கோ.,
தபால் பெட்டி 193 மதராஸ்.

என்றெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

தமிழர்.

ஓர் உயரிய மாத வெளியீடு. அறிவு ஆய்வுள்ள ஆராய்ச்சித் துறையிற் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டது.

இராயல் பதிப்பு:—

உள்நாட்டிற்கு ரூ. 2—8—0
வெளிநாட்டிற்கு ரூ. 3—0—0
சாதாரண பதிப்பு ரூ. 2—0—0

விலாசம்:—

அமைச்சர்
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி

குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள ஹிக்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்

கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்

சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ

திருப்பூர்—ஸ்ரீ என். ராமசாமிநாயக்கர் மானேஜர் காந்தி கதராலயம்

திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிக்கோட்டை.

கும்பகோணம்—ஸ்ரீ கா. கு. நீலமேகம் பிள்ளை, சுருட்டு வியாபாரம், பெரியகடைத்தெரு.

திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.

நாகபட்டணம்—ஸ்ரீ எ சக்கரபாணி பிள்ளை, கன்னாரப்பட்டரை.

மதுரை—நியூஸ் ஏஜண்டு, ஈவினிங் பஜார்,

விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.

மதராஸ்—நியூஸ் அண்டு அட்வர்டைசிங் ஏஜண்டு, நெ. 31 நம்பெருமாள் வீதி

கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த, புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.

தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.

கப்போ—ஸ்ரீ எம். எஸ். பிள்ளை C|o போர்ப்யோ மோட்டார் (லிமிடெட்.)

சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி, ரோட்

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

உண்மையான கதர்! கெட்டியான கதர்!

—:O:—

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், சயத்தையும் கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால் கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்

என்றுமறியாத இணையில்லா கீர்த்தி.

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

அஜீரணம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, கை கால் குடைச்சல், ஞாபகமின்மை முதலிய வியாதிகளைக் குணப்படுத்துவதில் சென்ற 45-வருஷ காலமாக என்றுமறியா இணையில்லா கீர்த்தியை அடைந்திருக்கிறது. நாங்கள் கேட்காமலே எங்களுக்கு வந்துகொண்டிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்களே போதுமான சான்றாகும். இம்முறைக்கே உபயோகித்து குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகள் அடங்கிய
டப்பி 1-க்கு ரூ. 1—0—0

விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—ஆதங்க நிக்கிரஹ ஔஷதாலயம்.
26 பிராட்வே மதராஸ்

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது — ரூ. 64,600,
வசூலிக்கப்பட்டது —ரூ. 35,540.
டிபாசிட்டுகள் —ரூ. 42,012-14-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்சேட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷகாலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-ௗ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயற்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமகா இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப் பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
10—2—26. மானேஜிங் டைரக்டர்.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.